95

# ஜகன்மோகினி

95



17 JUL 1945

3L
ள211,N2239
N45 22-7,
183103

அணா 4 July 1945

ஆண்டு 22 திங்கள் 7

JAGANMOHINI, SINGAPERUMALKOIL.

வயதான பிறகு வேலையிலிருந்து விலக்கப்பட்டிருக்கும் இன்னும் சிறிதுகாலம் வேலை செய்து சம்பாதிக்க விரும்பும் அனேகர், அகத்திலும் முகத்திலும் அச்சங்கொண்டு அடியிற் கண்டபடியே சொல்ல நேரிடுகிறது;—

## "ஐயா, நான் பார்வைக்கு எவ்வளவு வயதானவனாய்த் தோற்றுகிறேனோ அவ்வளவு வயதானவனல்லன்"



ஆனால் அவர் தாம் எவ்வளவு வயதானவராயிருக்கிறாரோ அவ்வளவு வயதானவராகவும், இன்னும் அதிக வயதானவராகவும் இருப்பதுபோல் கருதுகிறார். அவர் அப்படி நினைப்பதற்குக் காரணம் அவருக்கு உறுதியான சாய்மானம் இல்லை—சேர்த்துவைத்த பணமுமில்லை எந்த வேலையையேனும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவர் எதைக் கொடுப்பதாகச் சொன்னாலும் அவர் "வேண்டாம்" என்று தைரியமாய்ச் சொல்ல முடியாது. அவர் ஏக்கத்தின் ஆழத்தையே அறிந்தவர். ஆனால் நீர் இப்படியிருக்கவேண்டியதில்லை. நீர் இப்போதே திட்டம் வகுப்பீராயின், கௌரவமாய் வேலையிலிருந்து ஓய்வு பெற்று, சுகத்தோடும் மன அமைதியோடும் முதுமைப் பருவத்தைக் கழிப்பதற்குப் போதுமான பணம் பெறலாம்.

புத்திசாலிகள் வருங்காலத்தை நோக்கி, எஞ்சிநின்ற வருவாயை இப்போது நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் சேர்த்து வைக்கிறார்கள். அவர்கள் வருங்காலத்தைத் தைரியமாய் எதிர்நோக்கி நிற்கிறார்கள். நீரும் அப்படியே செய்யலாம்.

## நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணா, 8 அணா, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜென்டினிடமாயினும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இந்த இடங்களிலாயினும் கிடைக்கும்.

★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.

★ தனிவட்டி $4\frac{1}{6}$ சத வீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதுவரையில் சேர்ந்து வந்த வட்டியுடன் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

AAA 119

ஜகன்மோகினி

ஜீவிய சந்தா ரூ. 50

வருஷ சந்தா ரூ. 3

தனிப் பிரதி அணா 4

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு — திருவள்ளுவர்

ஜகன்மோகினியென் னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —வீரராகவ கஜ

Vol. 22. No. 7. பார்த்திப : ஆனி July 1945

# ஆதிவேதம்

இராக மாலிகை

ஆதி வேதஞ்சொலும் அத்யாத்ம தீரமும்,
ஆனந்த் வாழ்வும் வேண்டும்.
அரியசங் கரர்சொலுந் தன்னறிவு மிசவேண்டும்
அப்பர் சொலும் அன்பு வேண்டும். (1)

கீதைசொலு நிஷ்காம்ய கர்மயோ கம்வேண்டும்.
கிறிஸ்துவின் பொறுமை வேண்டும்.
கிருஷ்ணசை தன்யரின் பக்திபர வசம்வேண்டும்,
கேடிலா உறுதி வேண்டும். (2)

பேதமறு வள்ளலின் பெரியசமரஸம் வேண்டும்
பேய்மனம் அடங்க வேண்டும்
பிரியாத சிவசக்தி போலாண்மை பெண்மையுடன்
பேரின்ப மூண்ண வேண்டும். (3)

சாதனம தாஞ்சரியை கிரியை யோக ஞான
சன் மார்க்க சித்தி வேண்டும்.
தன்மயச் சின்மயப் பன்மயத் தெய்வமே,
சச்சிதா னந்த பரமே! (4)

சுத்தானந்த பாரதி

17 JUL 1945
183103
600 008

ஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதி

# வருங்கால கவி

முற்காலக் கவி, தற்காலக் கவி; இரண்டையும் ஒருவாறு கண்டோம்; இரண்டின் இலக்கணங்களையும் சுருக்கமாகச் சொல்லி இனிப் பிற்காலம் வரும் கவிதை எப்படியிருக்க வேண்டும் என்பதை ஆராய்வோம்: நமது நாட்டு மிகப் பழைய நூல் ருக்வேதம்.

அக்னிம் ஈளே புரோஹிதம்.
யஜ்ஞஸ்ய தேவம் ருத்விஜம்
ஹோதாரம் ரத்ன தாதமம்.!!

என்று ருக்வேதம் தொடங்குகிறது; இவ்வாக்குகளில் ஒரு தெய்வச்சுவை இசைக்கிறது; முனிவர் உள்ளமே நாத கம்பீரத்துடன் சலசலத்துப் பொங்குகிறது. இது மந்திரக் கவி; பிற்காலம் எழுந்த யாப்பிலக்கணத்தை வைத்து 'இதை அளக்க முடியாது' "முன்னோன், முதல்வன், இன்பமளிப்பவன், ஞானவேள்வித் தலைவன், இபற்கையுலகைத் தாங்கி நன்மையெல்லாம் தருபவன், ஆக்கியளித்து நீக்குந் தொழிலுடையோன், சோதி நந்நி வடிவோன் ஆகிய பரம்பொருளைப் போற்றி செய்கிறேன்" என்பது இம்மந்திரப் பொருள். இவ்வாறு உதாத்த அனுதாத்த ஸ்வரங்களுடன் ஆழ்ந்தகன்ற மலையாறுபோல வேத கீதம் சுதந்தரமாகச் சொல்லுகிறது. உபநிஷத்தும் அவ்வாறே—உதாரணமாக தைத்திரியம் கேனம், பிருஹதாரண்யம் சாந்தோக்யம் முதலியன கட்டற்ற சுதந்தரானந்தப் பாசுரங்கள். ஆனல் சில உபநிஷத்துக்கள் சுலோக வடிவில் அமைந்துள்ளன. ஈசம், கடம் இரண்டும் அவ்வாறு:

ஈசா வாஸ்யம் இதம் ஸர்வம்.
யத்கிஞ்ச ஜக்யாஞ் ஜகத்.

'உலகம் யாவும் இறைவன் உறையுள்' என்னும் இப்பாசுரம், ஓர் ஒழுங்கான சந்த வடிவைப் பெற்றது. வேதகாலந் தாண்டி, வால்மீகியின் காலத்தில், சுலோகம் என்று சிறப்பிக்கப்படும் அனுஷ்டிப் சந்தஸ், எட்டுப் பாதங்களுடன் உருவாகிப் பெருவாரியாக வழங்கத் தொடங்கியது;

ஸமுத்ர இவ காம்பீர்யே
தைர்யேண ஹிமவானிவ

(இராமன் மாண்பிற் கடலோன், துணிவில் இமயோன்) இந்த அனுஷ்டிப் சந்தஸ் இலக்கணப் படியமைந்தது. இதையே சுலோக குரு—ச்லோகேஷஷ்டம், குரு ஜ்ஞேயம்—என்பர். ஆதிகவியான வால்மீகிக்குப் பிறகு, மூன்று முதல் இருபத்தாறு சீர்கள் வரையிலுள்ள பல சந்த விருத்தங்கள் எழுந்தன. காளிதாஸன் காலத்தில் அனுஷ்டிப், கஜகதி, வித்யுன்மாலா, மாணவக, உபேந்த்ரவஜ்ரம், இந்த்ரவம்சம், ஜலதரமாலா, தோடகம், மாலதீ, வம்ஸஸ்தா, பஞ்சசாமரம், சித்ரலேகா, மந்தக்ரரந்தம், சிகரிணீ; சார்தூலவிக்ரீடிதம், கீதிகா, ஆக்ருதி, ஸம்ஸ்க்ருதி—முதலிய

பல இனிய சந்த விருத்தங்கள் தோன்றிக் கவிக் கலையை வளர்த்தன. எல்லாச் சந்தங்களையும் எளிய இனிய தெளிந்த நடையில் கையாண்டு உலகிற்கு உயர்ந்த ஞானச் செல்வத்தை யளித்தார் பகவான் சங்கரர். சங்கரவாணி உலகெங்கும் முழங்குகிறது.

தமிழில் கணக்கற்ற சந்த வகைகள் உண்டு. சங்க காலத் தமிழ் நூல்களில் அகவல் பெரும்பாலும், வெண்பா இரண்டையே காண்கிறோம். சமுஸ்கிரதத்திற்கு அனுஷ்டிப் சந்தஸ் குரு; தமிழுக்கு அகவல் என்னும் ஆசிரியப்பாவே குரு; பிறகு இயற்பா என்னும் வெண்பா வாகும்; குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பல் தொடை வெண்பா, குறள்வெண் செந்துறை, குறள் தாழிசை, வெண் தாழிசை, வெண் துறை, வெளி விருத்தம், நேரிசைஆசிரியப்பா, இணைக் குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா, அகவல் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம், கலிப்பா, வண்ணத் தாழிசை, சும்போதாங்கத் தாழிசை, நேரிசைத் தாழிசை, வெண் கலிப்பா, கலி வெண்பா, தரவு கொச்சகக் கலிப்பா; சில் தாழிசை, பல் தாழிசை, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா. கலித்தாழிசை கலித்துறை கலிவிருத்தம், கட்டளைக்கலிப்பா, கட்டளைக்கலித் துறை, வஞ்சிப்பா, குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா, வஞ்சித் தாழிசை, வஞ்சித்துறை வஞ்சி விருத்தம் மருட்பா, புறநிலை வாழ்த்து,' கைக்கிளை, வாயுரை வாழ்த்து,—முதலிய எத்தனையோ சந்தவகைகள் தமிழில் வழங்கும். இவற்றைத் தவிர இசைப் பாடல்கள் கணக்கற்றவை. தேவாரம், திருவாசகம், திருப்புகழ், காவடிச்சிந்து, அருட்பா முதலிய நூல்களில் எத்தனையோ சந்த வகைகள் உண்டு.

காலம் மாறிப் போனது. இடத்தையும் காலத்தையும் வெல்லும் கருவிகள் மனித சமுதாயத்தை வெகுவாக மாற்றி விட்டன; ஒரு ரேடியோப் பெட்டியைத் திரிகிவிட்டால், உலகக் கலைகளெல்லாம் நம்மெதிரே முழங்கும். கலைகள் கலந்து வருகின்றன. எண்ணங்கள் கலந்து வருகின்றன. வாழ்க்கை புதுமை பெற்று வருகிறது; உயிர்யாழில் புதுப் புது நாதங்கள் எழுகின்றன. அவற்றிற் கேற்றபடி இனி வரும்கவிகளும் அமையும். இனி வரும் கவிகள் ஆழ்ந்த ஆத்ம ரகசியங்களை நுட்பமாகத் தெரிவிப்பதுடன் நிற்க முடியாது; தற்காலக் கவிகள் செய்ய வேண்டியவை யாவன:-

(1) பரந்த உலகில் மனித சமுதாயத்தின் புதுப் புது முன்னேற்றப் படிகளுக்கு ஆதரவும் உற்சாகமும் அளிக்க வேண்டும்.

(2) காட்டிலும் குகையிலுமிருந்தே பாடிய காலம் போய்

விட்டது. நாட்டிலும் தெருவிலும் வீட்டிலும் புதுக்கவி பாடி புதுயுகத்தைத் தூண்ட வேண்டும்.

(3) கால—உணர்ச்சி (Age consciousness) கவிக்கு முதன்மை. சுதந்தரம் வேண்டும் இக்காலத்தில், மாரனலங்காரம் பாடிக் கொண்டிருக்க நேரமில்லை; இக்காலம் அகப்பொருளை விடப் புறப் பொருட் கவிகளே அதிகமாக வேண்டும். பழைய அகப் பொருட் கவிகள் போதுமட்டும் உள்ளன.

(4) இக்காலக் கவி சமுதாயத்தை ஒதுக்காமல், அதனுடன் ஒட்டுறவாயிருந்து, அதையே இறை—வடிவாகக் கருதி காணுர்ச்சனம் செய்ய வேண்டும். இறைவன் உயிர் மேனிப் பெருமான். சமுதாய சேவையும் சாமி சேவையே.

(5) பழமையை வெறுக்கக் கூடாது; புதுமையிலும் மோகித்துப் போகக் கூடாது. இரண்டின் நன்மைகளையும் இணைத்துப்பழம்-புதுக்கவிதைகளை ஆக்கவேண்டும். பழைய ஆத்ம வித்தை அமரத்தன்மை பெற்றது. அதுவே ஜீவாதாரம்; அந்த ஆதாரத்தின்மேல் காலத்திற் கேற்ற, ஜனசமுதாய முன்னேற்றத்திற் கேற்ற புதிய புதிய கருத்துக்களை அடுக்கிக் கவிமாளிகையை நவயுக விலாசமாக்க வேண்டும்.

(6) கவிதை பழைய விருத்தங்களில் இருக்கலாம்; முற்றும் புதிய சந்தங்களிலும் அமையலாம். எதுகை மோனையில்லாத வெறுங் கவிகளாகவும் இருக்கலாம்; எப்படியிருந்தாலும் உள்ளத்தை அள்ளும் சொல்லும் உருவும் உணர்வும், தெளிந்த பொருளும் பயனும் பொருந்தி, மனிதருக்குப் புதிய எழுச்சி தரவேண்டும்—

(7) தற்கால விஞ்ஞானம் இயற்கை உண்மையைப் பதத்தறிவதுபோல், தற்காலக் கவி, அகண்ட உலகியலைத் தொகுத்தறியவேண்டும். ஜனசக்தி, ஆன்மநேயம், அபேத வாதம், அறிவுப் பெருக்கம், ஆண்—பெண் சமத்துவம், சுதேச உரிமை, சர்வதேச ஐக்கியம் சர்வமத சமரஸம், தொழில் முயற்சி, பொருட் செழிப்பு, அருளுடைமை, பொது நலம், தியாகம், வீரம், பயனுள்ள கலையுணர்ச்சி, அழகுணர்ச்சி— ஆகியவற்றைத் தற்காலக் கவி தூண்டவேண்டும். "எனது தேசம்" என்ற பல்லவி கூட இனி "நம் உலகம்" என்ற விரிவான பொருளை மேவும். எனது நலம் என்பது பொது நலமாக மாறும். எனது யான் என்னும் உணர்வு இனி மனித சமுதாயம், மனித உரிமை என்று பரவும்.

(8) வருங்கால உலகம் ஒரு சாதிமதத்திற்கோ ஒரு தனி நாட்டிற்கோ உரியதன்று; அது மனித சமுதாயத்தின் பொதுக் கோயிலாகும்; ஆத்ம சமூகத்தின் அகண்டேகரஸமாகும்; அதில் ஆண்பெண் வாழ்க்கை அகண்ட ராஸ லீலையாகும்;

ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி

# இராமாயணத்தில் நரஸிம்ஹாவதாரம்

கம்பர் இயற்றிய இராமாயணம் கம்பராமாயணமென வழங்கப்படுகின்றதென்பது உலக மறிந்ததே. இதில் யுத்தகாண்டத்தில் மூன்றாவது படலம் 'இரணியன் வதைப் படலம்' என பிரஸித்தி பெற்றது. நரஸிம்ஹாவதாரம் செய்த பரமபுருஷன் ஹிரண்யகசிபு வென்னும் அசுரர் தலைவனைக் கொன்ற வரலாற்றையுணர்த்தும் பாகம் என்பது இதன் பொருள். பிரமனது குமாரனாகிய மரீசிப்ரஜாபதியின் மகனான காச்யப முனிவனுடைய மனைவியர்களுள் திதியென்பவளிடம் பிறந்தவன் இரணியன் என்பவன். ஸ்ரீ வராஹபகவானால் கொல்லப்பட்ட ஹிரண்யாக்ஷனுடைய ஸஹோதரன் இவன். திருமாலின் திருவாசல் காப்பவர்களான ஜய விஜயர்களே சாபத்தால் இவ்விருவராகத் தோன்றினரென்று புராணப்ரக்ரியை.

தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும் பஞ்ச மஹா பூதங்களாலும் ஆயுதங்களாலும் தனக்கு மரணம் நேராதபடி அளவற்ற வரங்களைப் பெற்று, தேவர் முதலிய யாவர்க்கும் கொடுமையியற்றி, உலகமெல்லாம் தன்னையே கடவுளாக வணங்கும்படிச் செய்து வந்த இவ்விரணியன், தன் புத்திரனை ப்ரஹ்லாதாழ்வான் மகாவிஷ்ணு பக்தனாய் தன் பெயர் சொல்லிக் கல்வி கற்காமல் நாராயண நாமம் சொல்லி வந்ததனால் அவனைக் கொல்வதற்குப் பல் பல உபாயங்கள் செய்தும் அவன் எம்பெருமானது திருவருளால் இறவாமற் போகவே (இரணியன்) மகனை நோக்கி 'நீ சொல்லும் நாராயணனென்பவன் எங்கு உள்ளான்? காட்டு பார்ப்போம்?' என்ன, அவன் "தூணிலுமுளன் துரும்பிலுமுளன் எங்குமுளன்' என்று சொல்ல, உடனே இரணியன் சினந்து 'இங்கு உளனோ?' என்று சொல்லி எதிரிலிருந்ததொரு தூணைப் புடைக்க, அதில் நின்றும் பகவான் அப்பொழுதே மனிதவுருவமும் சிங்கவடிவமுங்கலந்த நரசிங்கமூர்த்தியாய்த் திருக்கை நகங்களால் அவன் மார்பைப் பிளந்து அவனைக் கொன்றொழித்தனன் என்பது நரஸிம்ஹாவதார கதைச்சுருக்கம். இதுவே மேற்கூறிய இரணியன் வதைப் படலத்தில் அமைந்துள்ளது

"எம்பெருமானுடைய தசாவதாரங்களுள் நான்காவதான இந்த நரஸிம்ஹாவதாரத்தின் விருத்தாந்தம் ஏழாவதாகிய ஸ்ரீ ராமாவதாரத்தின் சரித்திரத்தைச் சொல்லுகிற ராமாயணத்திலே வரவேண்டிய ப்ரஸக்தி இல்லையே. முதல் நூலாகிய வால்மீகி ராமாயணத்தில் இஃது இல்லையே; இதனை இங்கு யுத்த காண்டத்தில் அமைக்கவேண்டிய சந்தர்ப்பமென்ன?" என்று சிலர்க்குச் சங்கை பிறக்கும்; அந்த சந்தர்ப்பம் தெரிவிக்கப்படுகின்றது காண்மின்;-

ஸ்ரீ ராமபிரான் தந்தையின் கட்டளைப்படி வனவாசஞ் செய்ய உடன்பட்டு மனைவியாகிய சீதையோடும் தம்பியாகிய லக்ஷ்மணனோடும் நகரத்தைவிட்டுப் புறப்பட்டுத் தண்டகாரணியஞ் சேர்ந்து கோதாவரிக் கரையில் பஞ்சவடியாச்சிரமத்தில் வசிக்கையில்; இலங்கைக்கிறைவனான இராவணன் தனது தங்கையான சூர்ப்பனகையினால் தூண்டப்பட்டுச் சீதையினிடம் பெருங்காதல் கொண்டு சன்னியாசி

வேடம்பூண்டு வந்து அவளை வஞ்சனையாக எடுத்துச் சென்று இலங்கையில் அசோகவனத்தில் அரக்கியர் சூழச் சிறைவைத்திருக்கையில், ஸ்ரீராமதூதனை அனுமான் கடல் கடந்து சென்று சீதையுள்ள இடத்தைத் தேடிக் கண்டு பிடித்து அவளுடன் பேசியபின் இலங்கை நகரத்தை எரித்து மீண்டு வந்து செய்திகூறியவுடனே இராமன் பெரிய வானர சேனையைச் சித்தப்படுத்திக்கொண்டு யுத்தத்தின் பொருட்டுப் புறப்பட்டுத் தென்கடலின் இக்கரையைச் சேர்ந்தவளவிலே, இராவணன் இனிச் செய்ய வேண்டிய தின்னதென்று தீர்மானிக்கும் பொருட்டு இலங்கைச் சபா மண்டபத்தில் மந்திரிகளுடனே ரஹஸ்யமாக ஆலோசனை செய்கையில் அவனது தம்பியும் பரம ஸாத்விகனுமான ஸ்ரீ விபீஷணாழ்வான் பற்பல நீதிகளை அனேகவிதமாக எடுத்துக்காட்டி, இராமபிரானது பல பராக்ரமம் முதலியவற்றையும் விரிவாகக்கூறி 'இராமன் ஸ்ரீமந்நாராயணாவதாரமாதலால் அவன் விஷயத்தில் அபசாரப்படாமல் சீதையைக் கொண்டுபோய் அவனிடம் ஸமர்ப்பித்து அவனைச் சரணமடைந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுதலே தகுதி; இல்லாவிடில் அரக்கர் குலத்திற்கே அழிவு உண்டாவது நிச்சயம்' என்று வற்புறுத்திக் கூறவும், இராவணன் அதற்கு உடன்படாதவனாய்க் கோபித்துப் பலவாறு இகழ்ந்து பேசவே, விபீஷணன் 'உன்னிலும் அதிகமான பல பராக்ரமமுடையவர் பலர் அத்திருமாலால் இறந்தொழிந்தனர்' என்று சொல்லி அதற்கு ஒரு நிதர்



சனமாக இரணியனது சரித்திரத்தை எடுத்துக் கூறினன் என்று கம்பர் அமைத்திருக்கின்றாரென்று உணர்க.

இந்த வ்ருத்தாந்தம் வால்மீகி ராமாயணத்தில் இல்லையாயினும் இதனைக் கம்பர் தொடுத்தது குற்றமாகாது. வழிநூலிலக்கணம் பற்றித் தமது கற்பனை சக்திகொண்டு கூறினரென்றால் இதுகுறையாகாது. விபீஷணுழ்வான் இராவணனுக்கு ஹிதோபதேசஞ் செய்த காலத்தில் இவ்வரலாற்றை அவச்யம் எடுத்துக் கூறியே யிருப்பான் என்றும் நம்பலாம். ஸ்ரீ ராமகதையை அறைகின்ற இதிஹாஸ புராணங்கள் பல பலவு முண்டாதலால் ஏதேனுமொரு புராண நூலை அவலம்பித்தும் கம்பர் இது கூறியிருக்கலாம்.

175 செய்யுட்களால் இவர் கூறியிருக்கும் நரஸிம்ஹாவதார கதை மிக இனிமை கொண்டதாய் பக்தி ரஸத்தை ஊட்டுவதாயிருத்தலால் அவ்வரலாறு எளிய வசன நடையில் வரையப்படுகின்றது.

அடுத்த இதழிலிருந்து
தொடர்ந்து வெளிவரும்.

## மோகினி ஓவியச் சோலை

மாதந்தோறும் மோகினி ஓவியச்சோலையில் கீர்த்தனை, பாசுரம், சிலேடை ஓவியமலர்கள் மலரும். அவற்றின் எழில் மோகினி அன்பர்களின் உள்ளங்களையும் மலரச் செய்யும். இவ்விதழில் கண்ணன் பாலக்ரீடை பாசுரமும், தியாகய்யர் பக்திப்ரபாவ கீர்த்தனையும், மும்மலைகள் சிலேடையும் நம் ஓவியர் பேனமுனையில் உயிர் பெற்று பிரகாசிக்கின்றன. கண்டு களியுங்கள்


### தற்போது கைவசமுள்ள வை. மு. கோ. நாவல்கள்.

புதிய பதிப்புகள்.

| | |
|---|---|
| 54. புகழ்மாலை | 1-12 |
| 63. இதயஒலி | 1-12 |
| 64. மலர்ந்த இதழ். பாகம் I. | 1—4 |
| ,, ,, ,, 2 | 1—4 |
| 65. அமுதமொழி (கிளேஸ்) | 2—8 |
| ,, ,, (சாதா) | 2—0 |
| 11. வீரவஸந்தா | 1—0 |
| 46. வத்ஸகுமார் | 1—0 |
| 62. பிரார்த்தனை | 1—0 |
| 66. பிரதிக்ஞை | 1—0 |
| 25. பக்ஷமாலிகா | 0—8 |

முன் பதிப்புகள்

| | |
|---|---|
| 51. உணர்ச்சி வெள்ளம் | 2—0 |
| 48. கானல் நீர் | 1-12 |
| 19. ஸரஸராஜன் | 0—6 |
| 42. உளுத்த இதயம் | — |



1— யசோதையிடம் ஒரு ஸ்த்ரீ புகார் செய்கிறாள்


2—3. கண்ணன் ஒருத்தியைக்கூப்பிட்டு வளையைக் கழட்டினான்.

4—5. ஓடிப்போய் நாவற்பழக்காரியைக் கூப்பிடுகிறான்.

6—7. அவள் கையில் வளையை மாட்டி பழம் பெறுகிறான்.

8. "நானல்ல" என்று சாதித்துச் சிரிக்கிறானே !

**பாசுரம் — 14-ம் பக்கத்தில்**



1.— தியாகய்யர் யாத்திரை செல்கிறார்
2.— திருடர்கள் அம்பெய்கிறார்கள்
3.— பல்லக்குத்தாங்கிகள் இதைத்தெரிவிக்கிறார்கள்
4.— ஐயர்வாள் ராமனைத்துதிக்கிறார்கள்
5.— ராமலக்ஷ்மணர் திருடர்கள்மீது அம்பெய்கிறார்கள்.

**கீர்த்தனை — 14-ம் பக்கத்தில்**

# கண்ணனின் பாலக்ரீடை

பெரியாழ்வார் திருமொழி 2—ப. 9—தி. 10—பா.

சொல்லிலரசிப்படுதிநங்காய்!
சூழலுடையன்உன்பிள்ளை தானே*
இல்லம்புகுந்துஎன்மகளைக்கூவிக்
கையில்வளையைக்கழற்றிக்கொண்டு*
கொல்லையில்நின்றும்கொணர்ந்துவிற்ற
அங்கொருத்திக்குஅவ்வளைகொடுத்து*
நல்லனநாவற்பழங்கள்கொண்டு
நானல்லேனென்றுசிரிக்கின்றானே (10)

படம் — 12-ம் பக்கத்தில்

## ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனை

*தர்பார்—ராகம்* *தி—தாளம்*

*பல்லவி*

*முந்து வெனுக யிருபக்கல தோடை*
*முரஹரா ரா! ரா!...... —மு—*

*அநுபல்லவி*

*எந்து கான நீ அந்த முவலெ ரகு*
*நந்தன வேகமே ரா! ரா! —மு—*

*சரணம்*


1. *சண்ட பாஸ்கர குலாப்தி சந்த்ர! கோ*
*தண்டபாணியை ரா ரா!*
*அண்ட கோஹுசு சௌமித்ரி சகிதுடை*
*அமித பராக்ரம ரா! ரா! —மு—*

2. *ஓ கஜரக்ஷக! ஓ ராஜகுமார!*
*ஓங்கார சதன ரா! ரா!*
*பாகவத ப்ரிய பாகப்ரோவ வய்ய*
*த்யாகராஜனுத ரா! ரா! —மு—*

படம் — 13-ம் பக்கத்தில்

---

புதிய பதிப்புகள் தயாராகின்றன.
கலாநிலயம் கிருபாமந்திர் மதுரகீதம்.



1.— இதோ எங்கள் அண்ணு மலை
2.— இதுதான் பறங்கிமலை,
3 — இதுவோ திரு நீர்மலை !

---


## உதய சூரியன்

வை. மு. ஸ்ரீ. முதல் நவீனம்
கவியோகி சுத்தானந்த பாரதி முன்னுரையுடன்.
இரண்டாம் பதிப்பு.

(உயரிய கிளேஸ்) ரூ-1-4-0

# நாரீமணிகளின் நந்தவனத்தில்

## புதிய பெரிய அம்சம்!

### 32 பக்கங்கள் வை. மு. கோ தொடர் நாவல்.

### 96 பக்கங்கள் பலசகோதரிகளின் கற்பனாலங்காரம்




குறிப்பு:...புதிய அளவில், அழகிய தோற்றத்துடன் வழக்கம்போல் பல படங்களுடன் வெளியாகும் 128 பக்கம் கொண்ட ருதுமலர் விலை 1-2-0 தான். உங்கள் பிரதிக்கு ஆர்டர் செய்தாய் விட்டதா? இல்லையேல் ரூ-7 முன்பணமனுப்பி இவ்வருட 6 ருது மலர்களும் ரிஜிஸ்டர்தபாலில் கிடைக்கும்படிச் செய்துகொள்ளவும்.

பல சகோதரிகளின் நூதன எழுத்து மலர்கள் தவிர, வை. மு. கோ 68-வது நாவல் வாழ்க்கைத் தோட்டம் சுமார் 200 பக்கங்கள் 30 படங்களுடன் முற்றும் ஷை மலர்களில் வெளியாகும்.

# அணுஜீவ தாக்குதலைத் தடுக்க நமது உடல் எடுத்துக்கொள்ளும் சில உபாயங்கள்

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M. B., B. S. D. T. M.

சுகநிலை என்பது என்னவென்று தீர்மானமாக விவரிப்பது சுலபமன்று. சுகமாக இருப்பதென்றால், நோய்களால் பிடிக்கப் படாமல் நாடோறும் உள்ள உழைப்புக்களைச் செய்ய வலிமையும், நிதானமான வளர்ச்சியும், போஷிப்பும், உடைய தேக அமைப்பு இருத்தல் வேண்டும். இந்த நிலையில் இருக்கும் மனிதர்களைப் பார்ப்பது எளிதன்று ஏனென்றால் நாம் முன்னமேயே சொல்லியபடி பிறவி முதல் அணுஜீவ தாக்குதலுக்கு நாம் இடங் கொடுத்துக் கொண்டே இருக்கிறோம். அந்த தாக்குதலைத் தடுப்பதற்காக நமது தேகத்தில் சில ஏற்பாடுகள் அமைந்திருப்பதையும் முன்பாகக் கூறி யிருக்கிறோம். இங்கு இதை கொஞ்சம் கூட விவரிக்கலாம்.

சர்மம், வாய், நாஸித்துவாரம், இவைகளின் வழியாய் நோய்தரும் அணுஜீவன்கள் உடலுக்குள் பிரவேசிக்க முயலும்போது இந்த அணுஜீவன்களை முதன் முதலாகத் தடுப்பவை வாயில் காப்போன்களாக இருக்கும் சில அணுஜீவன்கள். இவைகள் மனிதன் பிறந்த சில நாட்களுக்குள்ளாகவே மனித அங்கங்களில் வசிக்கத் தொடங்கிவிட்டதால் புதிதாய் வரும் அணுஜீவன்களுக்கு எளிதில் இடம் கொடுப்பதில்லை. எண்ணற்ற புது அணுஜீவன்கள் பிரவேசித்தால் இவை விஷநீர் பொழிந்து ஏற்கனவே வசித்துவரும் அணுஜீவன்களை மீறிக்கொண்டு உள்ளே செல்லவேண்டும். வாயில் இருக்கும் அணுஜீவன்களை மீறிக் கொண்டு நோய்தரும் அணுஜீவன்கள் சென்றாலும் உடலுக்குத் தோஷம் செய்யாமல் நாசமடைந்து விடலாம். ஆமாசயத்திலிருக்கும் புளிப்பு (Hydro-chloric acid) அவைகளைக் கொன்று விடும்.

டிப்தீரியா (Diphtheria) ஸ்டபிலோக்-காக்கஸ் போன்ற சில அணுஜீவன்கள் சர்மத்தையும், ஜவ்வையும் காயமில்லாதபோதிலும், துளைத்துச் செல்ல திறமையுடையவை என்றாலும் அவைகளை நாசம் செய்யச் சில பொருள்கள் சர்மத்தின் மீது பரவிக்கொண்டிருப்பதாய்த் தெரிய வருகிறது.

சர்மத்தையும் தாண்டின பின்பு நோய்-தரும் அணுஜீவன்கள் நிணநீர்த் தாரைகள் வழியாய்த்தான் உள்ளே செல்லும். அணுஜீவன்களைத்தாக்குவதற்குநிணநீர்த் தாரைகளில் இரத்தத்திலிருந்து வரும் வெள்ளை அணுக்களும் உண்டு. இதைத்தவிரவேறு ஒருவிதவெள்ளை அணுக்கள் லிம்ஃபாட்டிக்ஸ் நெறிகளில் விளைவதுண்டு. இருவித அணுக்களும் உள்ளே செல்லும் அணுஜீவன்களை விழுங்கி விடும். விழுங்கப்பட்ட அணுஜீவன்கள் அணுக்களுக்குள்ளே அநேகமாய் கரைந்துவிடும். கரையாவிடில் அவ்வணுக்கள் நாசமடையக்கூடும்.

இப்படி உடல் அணுக்களுக்கும் உள்ளே பிரவேசிக்கும் அணுஜீவன்களுக்கும் உண்டாகும் போரினால் சில சத்துக்கள் இரத்தத்தில் பரவக் கூடும். அப்போது மேலும் மேலும், வெள்ளை அணுக்கள் அணுஜீவன்

இருக்குமிடத்திற்கு இரத்தக் குழாய்களைத் துளைத்துக்கொண்டு விரைவாக வெளியே வரும். போர் நடக்குமிடத்திலிருந்து உணர்ச்சி நரம்புகள் மூளைக்கு விஷயத்தைத் தெரிவிக்கும். மூளைகளிலிருந்து தந்தி போலக்கட்டளைகள் புறப்படும். அக்கட்டளைகளினால் இரத்தம் அதிகமாக அனுப்பப்படும். அங்கு நோவும் உண்டாகும். நோவினால் அங்கம் அசைவற்றுப் போரில் அணுக்களுக்கு வெற்றி அளிக்க வசதி அளிக்கும். அணுக்கள் ஜயம் பெற்றால் போர் நடந்த இடத்தில் சீழ் சேரலாம். சீழை அணுதர்சியின் அடியில் வைத்துப் பார்த்தால் இறந்துபோனதும், போகாததுமான அணுஜீவன்களையும் பார்க்கலாம். அணுக்குகள் அபஜெயம் அடைந்தால் விழுங்கப்பட்ட அணுஜீவன்களோடு அணுக்கள் லிம்ஃபாட்டிக்லிருந்து இரத்தத்திலும் கலந்துவிடும். இச்சந்தர்ப்பத்தில் இரத்தத்தில் அணுஜீவன்களைக்காண முடியும். இரத்த ஓட்டத்தின் வழியாக அணுஜீவன் பல அவயங்களுக்குச் செல்லும். அணுஜீவன்கள் மண்ணீரல் (ஸ்பிளீன்—Spleen) கல்லீரல் (லிவர்—Liver) முதலிய ஈரல்களில் சேரும்போது அந்த ஈரல்களிலிருக்கும் விசேஷ ஜீவஅணுக்களால் நாசம் செய்யப்படும். அவயவங்களில் ஜீவ-அணுக்கள் போர்செய்து வெற்றி பெறும் வரைக்கும் மனிதன் பிழைத்து இருந்தால் இரத்தத்தியுள்ள அணுஜீவன்களெல்லாம் அழிந்துவிடும். முழுவதும் நாசமடையாத அணுஜீவன்கள் சில சந்தர்ப்பங்களில் சிறுநீர் வழியாய் வெளிப்படுத்தப்படும். மனிதனும் நோயிலிருந்து பிழைத்துவிடுவான்.

சில அணுஜீவன்கள் இரத்தத்தில் பரவாதபடி ஓரே இடத்திலிருந்து வளரலாம். உதாரணமாக, டிப்தீரியா என்ற பாக்டீரியத்தை குறிப்பிடலாம். இது தொண்டையில் இருபக்கத்திலும் பரவி வளரும்போது ஒருவித விஷநீர் சில நரம்புகளைக் கெடுத்து சில தசைகளின் வலிமையைக் குறைத்துவிடும்.

இருதயத்திலிருக்கும் தசைகள் இப்படி சக்தியற்றுப்போனால் இருதயம்நின்றுவிடக் கூடும். இப்படி உயிருக்கே ஆபத்து வரலாம். நோயாளி உயிர் பிழைத்தால் அவனது இரத்தத்தில் இந்த விஷநீருக்கு மாற்று மருந்தாக நிவர்த்தன ஸாதனங்கள் உண்டாகும்.

ரஸாயன முறைகள் நடைபெறும்போது உஷ்ணம் உண்டாவது சகஜமே. அதுபோல உடல், ஜீவாணுக்கள், பாக்டீரியாக்களுடன் அல்லது வேறு அணுஜீவன்களுடன் போர் செய்யும்போது ஊர்ஜிதமான ரஸாயன மாறுதல்கள் நடைபெறும். அப்படி நடைபெறும்போது உஷ்ணம் உடலில் அதிகரிக்கலாம். இருதயமும் சுவாசக் கருவிகளும் அதிவேகத்துடன் உழைத்து தோஷ (சாதனங்களை) வெளிப்படுத்தும். உடலிலிருந்து கொழுப்பு, புரதம் முதலிய மூலாதாரப் பொருள்கள் கரைந்துபோகும். இந்தவிதமாகவும் உடலில் உஷ்ணம் அதிகரிக்கலாம். ஆகவே நோயாளிக்கு ஜுரம் உண்டாகும்.

நாட்டில் யுத்தம் நடந்தபின் பஞ்சம் வருவதுபோல அணுஜீவன்களுடன் உடல் அணுக்கள் போர் செய்தபின், உடலில் சேர்த்துவைத்திருந்த போஷிப்பு ஸத்துகள் எல்லாம் குறைந்துவிடும். இதனாலே தான் வெகு நாட்களாக நோயினால் வருந்தினவர்களுடைய அங்கங்கள் தளர்ந்து இரத்தமும் கொழுப்பும் சோஷித்து அவயவங்களும் அசதி

அடைந்துவிடுகின்றன. இரத்தத்திற்கு ஆதாரமான ஈரல் அஸ்தி முதலிய அவயவங்களும் க்ஷீணமடைகின்றன. குடலுக்குத் தேவையான அளவு போஷிப்பு கிடையாமல் ஜீரண சக்தியும் குறையும். வேண்டிய அளவு பக்குவமான உணவு கொடுத்துத்தேகத்தைப் போஷித்தால் சரீரத்தை நோய் வருமுன் இருந்த நிலைக்குசுமாராகக்கொண்டுவரலாம்.

உணவும் வைடமின் ஸத்துக்களும் ஏராளமாகக்கிடைத்து, உடற் சுகநிலை மேன்மை அடைந்திருந்தால் எளிதில் நோய் பாதிக்காது. ஆதார உணவுப் பொருள்கள்கூட பஞ்ச காலத்தில் அவசியமான அளவு கிடைக்காமல் மனித உடல் வலிமை குறையும். அப்போது நோய்தரும் அணுஜீவன்களுக்கு எளிதில் உடலைத் தாக்கமுடியும். இதனாலேயே மனிதன் பஞ்சகாலங்களில் தொத்து நோய்களுக்கு எளிதில் இரையாகிறான். அளவுக்கு அதிமாக உணவை உட்கொள்வதனாலேயும் உடல் அணுஜீவத் தாக்குதலுக்கு இடங்கொடுக்கும். செல்வத்தில் வளரும் தனிகர்கள் உடல்வளைத்து வேலைசெய்ய அவசியம் இல்லாததனால் உட்கொள்ளும் உணவெல்லாம் வேண்டிய அளவிற்கு அதிகமாகின்றன. உட்கொள்ளும் பொருள்கள் உடலில் பல இடங்களில் கொழுப்பாகவும் சர்க்கரை மாவு பதார்த்தமாகவும் சேர்ந்து தங்குகின்றன. இதனாலே நீர் அழிவுபோன்ற நோய்கள் இவர்களிடத்தில் காணலாம். நீர் அழிவு நோயாளிகளுக்கு இரத்தத்தில் (Glucose) க்ளுக்கோஸ் என்ற ஒருவித த்ராக்ஷை சர்க்கரை இருப்பதனால், இவர்களுக்கு ஏதாவது காயம் பட்டுவிட்டால் பாக்டீரியாக்கள் எளிதில் உள்புகுந்து சீழ்பிடிக்கச் செய்யும்; விரைவாகவே இரத்தத்திலும் பரவி பல ஜன்னிகளுக்கும் காரணமாகும்.

ஆகவே நாம் மிதமாக உணவை அவசியமான வைடமின்களுடன் உட்கொண்டுதேகப்பயிற்சி செய்து, உண்ட உணவை பயன்படுத்தினால் அணுஜீவத்தாக்குதலிலிருந்து வெகு காலம் நம்மை காப்பாற்றிக்கொள்ளலாம். முதுமை அடைந்து உடல் வலிமை குறையும்போது அணுஜீவத்தாக்குதலைத் தடுக்க சக்தி குறையலாம். ஆனால் முதுமை அடைந்த உடலில் சாதாரண தொத்து நோய்களுக்கு மாற்றாக நிவர்த்தன ஸாதனங்கள் இரத்தத்தில் காணலாம். இது அணுஜீவ தாக்குதலுக்கு ஒரு தடங்கலாக இருக்கலாம்.

சிறு குழந்தைகளை, தாய் ஒருவித தோஷமும் வராதபடி காக்கிறாள். இப்படி அறிந்து பாதுகாப்பதோடு தன் வயிற்றில் வளரும் காலத்தில் சிசுவுக்கு நஞ்சுவழியாகவும் இரத்தத்தின் வழியாகவும் நிவர்த்தன ஸாதனங்களை தான் அறியாமலே கொடுக்கிறாள். பின்பு தாய்ப்பாலின் வழியாகவும் சிசுவுக்கு நிவர்த்தன ஸாதனங்கள் கிடைக்கின்றன. சிசுவின் வளர்ச்சி வேகமும் தொத்து நோய்கள் பாதிக்காதபடி காக்கும். "இப்படி பல விதமாக சிசு பருவத்தில் தொத்து நோய்கள் அதிகமாகப் பாதிப்பதில்லை. தாய்ப்பால் நிறுத்தி செயற்கை உணவுகள் கொடுக்க ஆரம்பித்தது முதல் அணுஜீவத் தாக்குதலுக்கு சிசுவின் உடல் இடம் கொடுக்கிறது.

நாகரீகம் முன்னேற்றமடைந்த நாடுகளிலே சுகாதார ஒழுக்கங்களும் பொதுஜன சுகவாழ்வு வசதிகளும் நன்கு விளங்கிவரும். மனிதனுடைய உணவிலாவது குடிக்கும் நீரிலாவது நோய்தரும் அணுஜீவன்கள் கலப்

ஸ்ரீமதி "குகப்பிரியை"

# அருணாசலம்

"கமலையிற் பிறக்க முத்தி, காசியில் இறக்க முத்தி, அருணையை நினைக்க முத்தி, மதுரையைச் சொல்ல முத்தி" என்று பெரியவர்களால் முத்திதரும் நகர்கள். அதிலும் நினைத்த மாத்திரத்திலேயே முத்தி 'அளிக்கவல்ல தலங்களுள் ஒன்று அருணாசலம் என்னும் திருவண்ணாமலை. இந்தப் புனிதமான தலம் விழுப்புரத்திலிருந்து காட்பாடி செல்லும் இருப்புப் பாதையில், திருக்கோயிலூரை அடுத்து 2 3 நிலயங்கள் தள்ளி இருக்கிறது. பஸ் மார்க்கமாகவும் போகலாம்.

ஊரும் கோயிலும் மிக மிக அழகுவாய்ந்தவை. கோயிலென்னும் ஓவியத்திற்குப் பின் அணிபோல் வானை அளாவும் கம்பீரமான மலை கமிர்ந்து நிற்கும். அழகிய அந்த மலைகளின் சிகரங்கள் சிவபெருமானது காம்பீர்யத்தையும், பள்ளத்தாக்கு அவரது கருணையின் ஆழத்தையும் குறிப்பதுபோல் தோன்றும். முதல் முதலாக ரயில் நிலயத்திலிருந்து ஊருக்குள் செல்லுமுன் கண்களைக் கவர்வது அழகிய கோபுரங்கள் சூழ்ந்த கோயில்தான்.

தமிழ் நாட்டில் பெரும்பான்மையான கோயில்களுக்குப் பல பிராகாரங்களும் நாற்புறமும் மிகப்பெரிய கோபுரங்களும் உண்டு. தவிர இராய கோபுரங்கள் என்றபெயர் கொண்ட பெரிய அஸ்திவாரம் ஓரளவில் நிற்பதை, மதுரை, ஸ்ரீரங்கம் முதலிய நகரங்களில் இன்றும் காணலாம். மிகப் பெரிய செயலில் இறங்குபவர்களையும், அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையுமுடையவர்கள் செய்யும் செயல்களையும் "என்ன காரியம் இது? ராயகோபுரத்திற்கு அடிப் போட்டாற்போல," என்று பரிகசிப்பதுண்டு.

ஆனல், திருவண்ணாமலையிலோ மிக மிகப் பெரிய ஐந்து கோபுரங்கள் ஒன்றை ஒன்று போட்டியிட்டு நிற்பதுபோல் வானை அளாவி நிமிர்ந்து நிற்கும். சந்நிதித் தெருவில் முதலில் நம் கண்களைக் கவர்வது

---

பதற்கு எளிதில் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. மேலும் கொடிய தொத்து நோய்களைத் தடுக்க வாக்ஸினேஷன் முறைகளைக் கையாளுகிருர்கள்.

சூரிய ஒளியிலிருந்துதான் சகல ஜீவராசிகளும் உயிர்வாழ்விற்கு வேண்டிய சக்தியை அடைகின்றன என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. சூரிய வெளிச்சம் பலவித கிரணங்களை உடையது. இந்த பலவித கிரணங்களில் அல்ட்ரா வயலட் (Ultra Violet) என்ற கிரணங்கள் பிராணிகளுடைய சுக நிலைக்கு மிக அவசியமானவை. ஆகாயத்தில் தூசி நிறைந்திருந்தால் அல்ட்ராவயலட் கிரணங்கள் நமது உடலுக்கு வந்து சேரா. ஆகாயம் சுத்தமாயிருந்தால் இக்கிரணங்கள் நமது உடலில் பட்டு இரத்தத்திலும் சர்மத்தின் அடியிலும் இருக்கும் அணுக்கள் வலிமை அடைந்து அணுஜீவன்களை எளிதில் தாக்கும்.

சூரிய வெளிச்சம், நல்ல காற்று, அவசியமான அம்சங்கள் அடங்கிய உணவு, அதை ஜீரணம் செய்கிற உடல் உழைப்பு இவை எல்லாம் இருந்தால் தொத்து நோய்கள் நம்மை அதிகமாக பாதிக்காமல் காப்பாற்றிக் கொள்ளமுடியும்.

மிகவும் உயர்ந்த பிரவிட தேசராஜன் கட்டிய கோபுரம்; அதையடுத்து ஒரு பிராகாரம். அதன் எதிரேயுள்ளது அதே அளவு உயரமுள்ள மற்ருெரு கோபுரம். இதை வல்லாள ராஜன் கோபுரம் என்பர். இதைத் தாண்டியதும் மற்ருெரு பிராகாரம். அதிலே நந்திமண்டபம். இதையடுத்து மிகப் பெரியதும் அழகியதுமான குளம்.

## சிந்தூர கணபதி.

சந்நிதிக்குச் செல்லுமுன் இந்தக் குளத்தில் இறங்கி அனுஷ்டானங்களை முடித்துச் செல்லுவர். இதன் கரையின்மேல் வீற்றிருக்கும் சிந்தூர கணபதியைத் தொழுதுதான் மேலே செல்லவேண்டுமென்பது நியமம். ஏறக் குறைய மதுரை முக்குறுணிப் பிள்ளையாரை ஒத்த திருவுருவம். சிந்தூரம் பூசப்பெற்றுசிவந்து தோன்றுவார். சிந்தூரத்தின் மணம் எப்பொழுதும் அந்தச் சுற்று வட்டம் முழுவதும் நிறைந்திருக்கும். அவருக்கு எதிர்ப்புறத்திலுள்ள பதினுறுகால் மண்டபம் மேலே விமானமுடையது. இதை வளைகாப்பு மண்டபம் என்கிருர்கள். ஆடிப் பூரத்திருவிழாவில் இங்கே தேவிக்கு வளையல் அணிவிப்பார்கள்.

இந்தத் திருநாளன்று, ஊரிலுள்ள பெண்மணிகளுக்கெல்லாம் இலவசமாய்க் கோயில் செலவில், எண்ணெய் மஞ்சள், சீக்காய் கொடுத்து அழைத்து, குளத்திலே நீராடி வளையல்களை அணிந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். இந்த விழா இவ்வூரில் மட்டுமேயன்றி இவ்வூர் வாஸிகள் எங்கே சென்ருலும், வீடுகளிலும் கொண்டாடுவதுண்டு. தேவிக்கு உகந்த நாள் ஆடிப்பூரம் என்றும், ஆண்டாள் அவதரித்ததும் இந்த ஆடிப் பூரத்திலேயே என்றும் வைணவர் கொண்டாடுவதுபோல்.

## கம்பத்து இளையனுர்

இம் மண்டபத்துப் பின்புறத்துத் தூண்களுள் ஒன்றை ஒட்டி ஒரு சிறு கோயில், அதை கம்பத்து இளையனுர் கோயில் என்பர். இரு பக்தர்கள் வாதம் செய்தபொழுது, அந்தத் தூணில் எழுந்தருளியிருந்த முருகப் பெருமான் வாய்திறந்து பதில் சொல்லிச் சண்டையைத் தீர்த்து வைத்தாராம். ஆகவே அந்த முருகனை கம்பத்து இளையனுர் என்ற பெயரால் வழங்கிக்கோயிலும் கட்டி விட்டார் அந்த பக்தர்.

## கோபுரத்து இளையனுர்.

இந்தச் சிறு கோயிலையும் சிந்தூர கணபதியையும் தாண்டி முன் சென்ருல், அடுத்த நடுத்தர உயரமுள்ள ஒரு கோபுரம். இதைக் கிளிக் கோபுரம் என்று வழங்குகிருர்கள். அதன் அடியில் வலது புறத்தில் உயர்ந்த படிகளோடுகூடிய முருகன் கோயில். இந்த முருகனைக் கோபுரத்து இளையனுர் என்று சொல்லுகிருர்கள், குழந்தை வேலன் குமரன், என்னும் சொல்லையே இவர்கள் இளையனுர் என்று குறிக்கிருர்கள். அருணகிரியார் (திருப்புகழ் பாடிய) வியாதியின் கொடுமை தாளாமல் உயிரை விட்டுவிடவேணுமென்னும் எண்ணத்துடன் இந்தக் கோபுரத்திலிருந்து குதித்து விட்டாராம்! அப்பொழுது வள்ளி தேவஸேனையுடன் ஓடிவந்து இரு கைகளாலும் ஏந்திக் கொண்டானும் பக்த வத்ஸலனை முருகன். அப்பொழுது முருகன் ஏந்தி நின்ற தலமே இக் கோயில். இங்கேயே கிளியுருவாய் உன் கையிலே தங்கி நின்று, உன் திருப்புகழை வான வீதியிலும் பரவச் செய்கிறேன் என்று கெஞ்சிருராம். அப்படியே வரம் கொடுத்ததால் இதற்குக் கிளிக்

கோபுரம் என்று பெயராயிற்று. இதைத் தாண்டி உள்ளே சென்றால் மிகவும் விஸ்தாரமான பிராகாரங்கள் சூழ்ந்த அருணாசலேசுவரர் சந்நிதி. இந்தப் பிராகாரங்களுள் ஒன்றில் ஸ்ரீ ரமணபகவான் ஆதியில் தங்கியிருந்த பாதாள லிங்கத்தின் ஸந்நிதி இருக்கிறது.

## தலமகிமை

பஞ்சலிங்க க்ஷேத்திரங்களுள் ஒன்று திருவண்ணாமலை. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்தினுள், பிருதிவிலிங்கம் கச்சி ஏகம்பன் என்றும், வாயு சீகாளத்திநாதன் என்றும், ஜலம் ஜம்புகேசுவரன் என்றும், ஆகாச லிங்கம் அதாவது காற்றையே உருவாக உடையவர், உருவமற்றவர் சிதம்பரம் என்றும், அக்னிலிங்கம் அருணாசலமென்றும் சொல்லுவார்கள். நம் நாட்டிலுள்ள சிவாலயங்களில், மூதற்பிராகாரத்தில் ஏதாவதொரு பகுதியில் அருணாசலேசுவரரின் காணப்படும்.

## வல்லாளன்

திருவண்ணாமலையில் பிற்காலம் ஆண்ட வல்லாளன் பெயர் சரித்திர பிரசித்தம். குழந்தையில்லாக் குறைதீர, கேட்டதை யெல்லாம் கொடுப்பதாக வல்லாளன் கொடி கட்டினன் என்றும், சிவபெருமான் அவனது உறுதியைச் சோதிக்க எண்ணி, அவனது இளைய மனைவியை யாசித்தாரென்றும், அவன் மனமுவந்து கொடுக்க ஒப்பிய உடன் சிவபெருமான் தானே குழந்தையாகிக் குறை தீர்த்தார் என்பதும் சரித்திர உண்மைகள். இதை மெய்ப்பிப்பதேபோல் வருடம் ஒரு முறை சிவபெருமான் வல்லாளனுக்கு ஈமக்கடன்கள் செய்கிறார். அருகிலுள்ள ஒரு கிராமத்தார் சிவபெருமானுக்கு மரியாதையாய் தலைக்கு முண்டாசும் கொண்டுவருவதை இன்றும் காணலாம்.

## அம்மணி அம்மாள் கோபுரம்

மற்றக் கோயில்களைப்போலவே இங்கும் சிவபெருமான் லிங்க உருவமாகவேதான் காட்சியளிக்கிறார். சந்நிதியிலிருந்து, விஸ்தாரமான அந்த மண்டபங்களையும் பிராகாரங்களையும் தாண்டிப் பிரதக்ஷிணமாய்ச் சென்றால் உண்ணாமுலையம்மாள் சந்நிதி. முற்கூறிய ஐந்து பெரிய கோபுரங்களில் தேவியின் சந்நிதியை அடுத்திருப்பது அம்மணி அம்மாள் கோபுரம். தமிழ் நாட்டுப் பெண்மணிகளுள் பக்தியிற் சிறந்தவர் பலர். காரைக்கால் அம்மையார், ஆண்டாள், திலகவதியார் முதலியவர்களை நமக்குத் தெரியும். வீரைகளாய் வாளேந்திப் போர்க்களம் புகுந்தவர்களையும் பார்த்திருக்கிறோம். அரசாட்சி செய்தவர் சிலர். ஆனால் ஒரு பெண்மணி வானை அளாவும் ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டி முடித்த அதிசயம் திருவண்ணாமலைக்கே உரியது. இந்தக் கோபுரத்தின் ஒரு பகுதியில் இடி விழுந்து பிளந்திருந்ததை சமீபத்தில் சீர் திருத்தி இருக்கிறார்கள். இந்தப் பகுதியிலுள்ள தெருக்களில் உள்ளவர்கள், இந்தக் கோபுரத்தின் வழியேதான் வருவது வழக்கம். இந்தக்கோபுரவாயில்எப்பொழுதும் திறந்தும் பக்தர்களின் கூட்டம் நிறைந்துமிருக்கும். சந்நிதிக்குப் பின்புறமுள்ள கோபுரத்தைப் பேய்க் கோபுரம் என்றும், வடக்கு வாயில் கோபுரத்தைத் திருமஞ்சனக் கோபுரம் என்றும் வழங்குவர். பேய்க் கோபுரத்தின் வாசல் இப்பொழுது அடைக்கப்பட்டுவிட்டது. யாரோ அங்கே இறந்ததன் பயனாக அழகிய அந்தக் கோபுரவாசல் வழியே ஒருவரும் நடப்பதில்லை.

## தேவி சந்நிதி

வெளிப் பிராகாரத்தைச் சுற்றி வரும் பொழுது விசாலமான கல்யாண மண்டபம், அருணாசல தல புராணமும், வல்லாளராஜன் கதையும் இந்த மண்டபத்தின் சுவரில் மேற்புறம் சித்திரமாய்த் தீட்டப் பெற்றிருக்கும். தவிர சிவபெருமானது திருவிளையாடல்களில் சிலவும் உண்டு. இதைத்தாண்டிப் பிரதக்ஷிணமாய்ச் சென்றால் தேவியின் சந்நிதியை அடையலாம். சந்நிதிக்கு முன் மண்டபத்தில் கந்தனும், கணபதியும் இருபுறம் வீற்றிருப்பர். இங்கேயும் ஸிந்தூர கணபதிதான். ஸிந்தூராசுரனை வென்ற சிரமந்தீர உட்கார்ந்து சிரமபரிகாரம் செய்து கொள்பவர்போல் தோன்றுவார். அடுத்து துவாரபாலகிகள். அவர்களைத் தாண்டி உள்ளே சென்றால் மிகவும் விசாலமான பெரிய மண்டபம். இதை அஷ்டசக்தி மண்டபம் என்பர். மிகப் பெரிய எட்டு தூண்களில் அஷ்ட சக்திகளின் உருவம் வெகு அற்புதமாய்ச் செதுக்கப் பெற்றிருக்கும். ஒவ்வொரு சக்தியின் குணங்களைத் தெளிவுபடுத்தும் பாவம் தோன்றும்; நான்கு கைகளிலும் அந்தக் குணங்களுக்குரிய ஆயுதந்தாங்கிக் காட்சியளிப்பாள் பராசக்தி. இந்த மண்டபத்தைத் தாண்டியதும் கர்ப்பக்கிரகம். சின்னஞ் சிறு குழந்தைப் பெண்போல் நின்றிருப்பாள் அபீதகுசாம்பாள். அழகிய சிறுபெண் ஒருத்தி அடியெடுத்து வைத்து நடப்பதற்குச் சித்தமாயிருப்பது போலவும், அபயங்கொடுக்கும் அம்மலர்க்கைகள் நமக்கு எதையோ அளிக்க முன்வருவது போலவும் தோன்றும்.

## விழாக்கள்

மற்றத்தலங்களைப்போல இங்கே சித்திரைத் திருநாள் கிடையாது. கார்த்திகையிலேதான் திருவிழா அருணாசலதீபம். சிவபெருமான் சோதிப்பிழம்பாய் நின்றதை இன்றும் காண்பதாக ஐதீகம். தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஆலயங்களிலும் சொக்கப்பனை கொளுத்துவதும் இதே கருத்தை உட்கொண்டதுதான். மற்றத்தலங்களில் சிவாலய, விஷ்ணு ஆலயங்களைப்போல இங்கே வாகனங்கள் மிகவும் விலையுயர்ந்தவை. வெள்ளிரதம் அதாவது அடிப்பாகம் முழுவதும் பொன்னாலும், மேற்பகுதி, தலையலங்காரம் முழுமையும் வெள்ளியினாலும் செய்த தேர் இவ்வூருக்கே உரிய தனிச்சிறப்பு. இவ்வூர் வாகனங்களுள் மிகவும் பெரியது வெள்ளி ரிஷபம். மையிட்ட கண்களை உருட்டி விழித்து, திமிலைச்சிலிர்த்துக் கொண்டு, மொக்காரம் போட்டுப் புறப்படச் சித்தமாயிருப்பது போன்ற நிலையில் நிற்கும். மற்ற வாகனங்களில் சிவபெருமான் உலா வருதலும், பிக்ஷாடனத்திருக்கோலமும், பார்க்கப்பதினாயிரங்கண்கள் போதாது. காணக் கண்கோடி வேண்டும், என்றே தோன்றும். அகன்ற அந்த வீதிகளிலே சிவபெருமான் பவனிவரும் பொழுது "நம்பியைக்காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும். கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கும் அன்னதேயாம்" என்ற கம்பன் வாக்கு நம் மனத்துள் எழும்.

* * * *

கார்த்திகை மாதத்துப் பூர்ணிமையன்றுதான் திருக்கார்த்திகை. மலைமீது மிகப்பெரிய ஆலைக்கொப்பரை நிறைய எண்ணெயும் நெய்யும் நிரப்பி, இரண்டு மல்பீஸுகளைத் திரியாக்கி தீபம் ஏற்றுவார்கள். அந்தத் தீபத்தின் ஒளி சுற்றுப் பதின்காதம் வரையில் தெரியும்.

தீப வழிபாடு காலையிலேயே நடந்து விளக்கு ஏற்றப்படும். ஆனால் இரவு புறப்பாடு ஆகி கோபுரவாசலில் வந்து நின்ற உடனே கற்பூர ஹாரதி ஆன உடன் ஒரு ஆகாச வாணம் விடப்படும். உடனே மலையின்மேலுள்ள அற்புத ஜோதி சுடர்விட்டு ஒளிரும். அண்ணாமலைக்கு அரோஹரா! என்ற கோஷம் மலையடிவாரத்தினின்றும் கிளம்பி வான வீதி முழுவதும் சிலையோடும்.

தைமாதத்தில் திருவூடல் என்றொரு விழா நடைபெறும். அதைச் சேவிப்பவர் பிறவிப்பிணி நீங்கப் பெறுவர் என்று சொல்வர். திருவூடல் பார்த்தார்க்கு மறு உடலில்லை, என்று பழமொழி.

## மலை

பேய்க்கோபுரத்தின் பின்புறம் தான் மலையில் ஏறுவதற்கான படிகள். சுமார் 200 படிகள் ஏறினால், ஒரு அழகிய அரசடிமேடை, அதன் வலப்புறம் பின்னும் சிலபடிகள் ஏறிச்சென்றால் அழகிய ஒரு குளம் போன்ற ஊற்றை அடையலாம். இதன் தண்ணீர் வெண்மையாக விருப்பதால் இதைப் பாலூற்று என்கிறார்கள். இதை யடுத்த விடத்திலேதான் பகவான் ரமணமகரிஷி தங்கியிருந்த விருபாக்ஷிகுகை. இங்கே ஒரு சிறு கட்டடமும் உண்டு.

## குகை நமச்சிவாயர்

இன்னும் கொஞ்சம் மேலே சென்றால், அங்கே ஒரு சிறுதோப்பு. அதையடுத்துக் கீழே ஒரு சின்னஞ் சிறு குகை. அதை குகை நமச்சிவாயர் கோயில் என்கிறார்கள். அந்தக்கோயிலை ஒட்டி மிகவும் அற்புதமான கதை ஒன்று சொல்லப்படுகிறது. சிவபெருமான் ஆலமுண்ட பொழுது உமாதேவியார் அவரது கண்டத்தைத் தமது கரங்களாற் பற்றினாரென்றும், ஆலாலவிஷம் கழுத்திலேயே நின்றுவிட்டதென்றும் நீலகண்டன் வரலாறு சொல்லும். இங்கே இந்நகரத்து மக்கள் மீது கருணைகொண்ட தேவியார் 'அறம்' பாடத்தொடங்கிய நமச்சிவாய யோகியின் வாயைப் பொத்தினாராம்.! தன் குழந்தைகளின் மீதுள்ள வாத்ஸல்யத்துக்கு இதைக் காட்டிலும் சிறந்த உதாரணம் ஏது?

பெரியோர்களும் ஸாதுக்களும் இருக்குமிடத்தில் அவர்களுக்குப் பின் அணியாகத் துஷ்டரும் எதிர்ப்போரும் இருப்பது வழக்கம்தானே! திருவண்ணாமலை மட்டும் இதற்கு விலக்கா?

ஒரு எளிய குடியானவனுடைய சூல்கொண்ட ஒரு ஆடு இறந்து போயிற்று. ஓவென்று நெடுங்குரல் பாய்ச்சி அழத்தொடங்கினான். அருகிலுள்ள சில போக்கிரிகள் "ஆடு இறந்து விட்டது. அழுவதில் பயனென்ன? இறந்தது பிழைக்குமோ? இதை விற்று இன்றையச்செலவுக்கு வைத்துக்கொள்" என்றார்கள். குடியானவன் கபடமற்றவன். இவர்களின் வார்த்தையை மெய்யென்றெண்ணி அந்த ஆட்டைத் தோளிற் சுமந்து விலைகூறத் தொடங்கினான். இதற்குள் மற்றவர்கள், 'அடே இங்கே செத்த ஆட்டை வாங்குவார் ஒருவருமில்லை. மலைமேலே நமச்சிவாய யோகி என்றொருவர் இருக்கிறார்; அங்கேபோனால் நல்ல விலை கிடைக்கும்" என்றார்கள். இடையன் முக்கித்தக்கி மலையேறி குகையை அடைந்து தன் குறையைச்சொன்னான். யோகி, விஷயத்தைப் புரிந்துகொண்டார். 'இன்று போய் நாளை வா' என்றார்.

மறுநாட்காலை. குடியானவன் போனபொழுது ஆடு குட்டிகளுடன் கொஞ்சிக்கொண்டிருந்தது. ஆச்சர்யமிகுதியினால் திகைத்துப்போ

னுன் அவன். உடனே ஊர் முழுவதும் பரவிவிட்டது அற்புதம். பார்த்தார்கள் அவர்கள். இந்த யோகியாவது பிழைக்க வைக்கவாவது இந்தக் குடியானவன் உளறுகிருன் என்று, வேறொரு யுக்தி செய்தார்கள். நல்ல இளம்பிள்ளை ஒருவனைப் படுக்கவைத்துப் போர்த்து, இறந்துவிட்டானென்றும் பிழைக்க வைக்க வேணுமென்றும் கேட்டார்கள். இறந்தவன் பிழைப்பதேது என்ருர் யோகி. உடனே போர்வையைத்திறக்க உண்மையில் பையன் இறந்தேபோயிருந்தான். யோகி மனம் கொதித்தார். அடாடா! ஐயோ! அநியாயமாய் ஒரு இளம்பிள்ளை இறந்துவிட்டானே என்று வருந்தி, இத்தகைய பாவிகள் நிறைந்த அண்ணுமலை அழியட்டும் என்று அறம்பாடத் தொடங்கினர். அந்த ஈற்றடியில் அழியும் அண்ணுமலை என்று முடிக்கப்போமளவில் பூமியிலிருந்து தேவியார் தோன்றி அவர் வாயைப் பொத்தியதாகக் கர்ணபரம்பரை.

இன்றும் அந்த அழகிய சிறு குகையில் ஒரு விபூதிக் குவியலும் அதையடுத்து தேவியின் அழகிய கற்சிலையும் காணப்படும். இந்த மலையின் எந்தப் பகுதியில் நின்று பார்த்தாலும், அருணுசலத்தின் தோற்றமும், அருகேயுள்ள பவளக்குன்று முதலியவைகளும் திருக்கோயிலூர் அறையணிநல்லூர் முதலிய கோயில்களின் கோபுரங்களும், அங்கங்கேயுள்ள நீர் நிலைகளும் சிறந்த ஓவியனுல் எழுதப்பட்ட சித்திரம்போல் தெரியும். இந்தமலையைச் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் பக்தர்கள் வலம்வருவதுண்டு. வலம் வரும பொழுது, நேர் மறுபுறத்தில் அடிஅண்ணுமலை கோயில் என்று ஒரு கோயில். முற்காலத்தில் கோயில்கள கோட்டைகளாக உபயோகிக்கப்பட்டனவென்பதும் கோபுரங்கள் தூரதிருஷ்டிக் கருவிகளுக்குப் பதிலாக உபயோகிக்கப்பட்டனவென்பதும் சரித்திர உண்மைகள். இதேபோல கோயில்களில் அங்கங்கே விக்ரகங்களுக்கு அடியில் சுரங்க வழிகள் உண்டென்றும் சொல்வதுண்டு. இப்பொழுதும் அடிஅண்ணுமலை கோயிலுக்கும், அருணுசலேசுவரர் கர்ப்பக்கிரகத்திற்கும் சுரங்க வழி இருக்கிறதென்றும் அது நாலைந்துமைல் நீளமுள்ளதென்றும் பகைவர் முற்றுகையிட்டால் (திருவண்ணுமலை) அரசபரம்பரையினா தப்பிச் செல்லவும், ஒற்றர்கள் நடமாடவும், ஆபத்துக் காலங்களில் உணவு ஆயுத வசதிகளை வரவழைத்துக் கொள்ளவும் உபயோகிப்பதன பொருட்டு வல்லாளன் கட்டினனென்று கர்ண பரம்பரைக கதைகள் சொல்லும்.

இத்தகைய பெருமை பெற்றதும் நினைத்தமாத்திரத்திலேயே முத்தி அளிக்க வல்லதுமான அருணுசலம் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகிய பகவான் ரமணரிஷிகளை வசீகரித்ததில் ஆச்சரியமென்ன?

183108

(அடுத்த கட்டுரை ரமணச்ரமம்)

---


## நந்தவனம் பார்த்திப வரு

### வஸந்த ருதுமலர்

வழக்கம்போல் பல அழகிய கலர்ப்படங்களுடன் மலிவுப பதிப்பு ரூ. 1—2 ரிஜிஸ்ட்ரேஷன் செலவு அணு. 3. 6 ருதுமலர்களும் தபாற் செலவுள்பட ரூ. 7. வி. பி. கிடையாது.



சூடாமணி

# சம்பு ஐயரின் பட்டாணிப் பயிர்

சென்ற இதழ் தொடர்ச்சி

"அது யார்? முயலண்ணவா? என்ன சுகந்தானு?" என்ருர்.

"சுகத்துக்கு என்ன குறை, நாளொன்றுக்கு ஐந்து ரூபாய் கிடைக்கும்போது?"'ஆலோலம்' ஆலோலம்" பாடத் தொடங்கினர்.

"விளங்கவில்லையே! எப்படி ஐந்து ரூபாய் கிடைக்கிறது?"

"பிரமாத வேலையொன்று மில்லை. காலமே ஆறுமணிமுதல் சாயங்காலம் ஆறுமணி மட்டும் இந்தத் தோட்டத்தில் குருவி ஓட்ட வேண்டும். சாயங்காலம் ஆனதும் நரி அண்ணு ஐந்து ரூபாய் கொடுத்து விடுவார். கொஞ்ச நாளாக இந்த வேலைதான். என் கடன்களையெல்லாம் சுமாராக அடைத்து விட்டேன்."

"இந்தமாதிரி ஒரு வேலையிருந்தால் இந்த ஏழைக்குச் சொல்லக் கூடாதா? நான் பிள்ளை குட்டிக்காரனுச்சுதே".

"பாகவதாளுக்கு இந்த வேலை தகாது."

"அப்படி இல்லை. வீட்டிலே கொஞ்சம் சிரமம்."

"அப்படியா! எனக்குத் தெரியாது. வேண்டுமானல் இன்றைக்கு மட்டும் உதவி செய்கிறேன். இன்றைக்கு வருகிற வருமானத்தை நீர் எடுத்துக் கொள்ளும். இந்தக் கிளையைத் தாழ்த்தி என்னை எடுத்து விட்டு நீர் இந்தக் கிளையிலே தொங்கிக் கொண்டிரும். வேறு ஒன்றும் செய்யவேண்டாம்.

ஆலோலம். ஆலோலம்
ஐந்து ரூபாய்க்கு ஆலோலம்

என்று ஆறு மணி வரைக்கும் பாடினல் போதும். ஒரு பறவைகூட வராது. நரி அண்ணு சரியாக ஆறு மணிக்கு வருவார். ஐந்து ரூபாய் தருவார்."

"நீ பிள்ளை குட்டிகளோடு க்ஷேமமாக வாழவேணும் அப்பா" என்று வாழ்த்தினர்; கயிற்றைத் தமது கழுத்திலே மாட்டினர் காடிராயர். ஆலோலம் பாடத் தொடங்கினர்.

## யமன் வாயில் சிக்கிய மிடாத் தவளையார்.

முயல் அண்ணு சம்பு அய்யரிடம் போய்த் தோட்டத்தில் பட்டாணிக் காய்களைத் திருடுகிற பேர்வழி இன்னுர் என்று ராயரைக் காட்டிக் கொடுத்தார். சம்பு ஐயரும் கண்ணியில் தொங்கிக்கொண்டிருந்த கரடி ராயரைத் தண்டிக்க ஓடிச் சென்ருர். முயல் அண்ணுவோ பட்டாணிப் பயிருக்குள் புகுந்து ஒரு கூடை நிரம்பக் காய்களைப் பறித்து எடுத்துக்கொண்டிருந்தார்.

கண்ணியிலே தொங்கிக்கொண்டிருந்த ராயரைக் கண்டதும் சம்பு அய்யருக்கு வந்த கோபத்துக்குக் கங்கு கரை இல்லை. "ராயா! பக்தி வேஷம் போட்டா என் பட்டாணிக் காய்களைத் திருடுகிருய் நாள் தோறும்?" என்று கத்திக்கொண்டே பக்கத்தில் கிடந்த ஒரு மூங்கில் தடியை எடுத்தார்; பளார் பளார் என்று அடித்தார். கரடி ராயர் கயிற்றிலே சுழன்று ஆடினுர். காலையும் கையையும் உதறினுர். "அடிக்காதே! நான் நிரபராதி; ஒரு குற்றமும் அறியேன்; ஒரு பாவமும் அறியேன்; அந்தப்போக்கிரி, முயலண்ணு என்னை ஏமாற்றிவிட்டான். இத்தனையும் அவனுலே வந்த கேடு எனக்கு" என்று கூச்சலிட்டார்.

"திருடி விட்டுப் பொய்யும் சொல்லுகிருயா, அட ஆஷாடபூதி?" என்று கத்திக்கொண்டே பின்னும் மூன்று அறை அறைந்தார் சம்பு அய்யர் மூங்கில் கழியாலே. "சம்பு! என்னை அடிக்காதே. அவிழ்த்து விடு! நான் பிடித்துத்தருகிறேன் அந்தத் திருட்டுப் பயலே!" என்று அலறினுர் ராயர். அதே சமயத்தில் முயல் அண்ணு ஒரு கூடைக் காய்களோடு ரஸ்தாவழியாக வீட்டுக்குப் புறப்பட்டார். முயல் அண்ணு போகிறதைச் சம்பு ஐயருக்குக் காட்டினுர் கரடி ராயர். உடனே சம்பு ஐயர் கரடி ராயரைக் கீழே இறக்கி அவிழ்த்து விட்டார் கண்ணியிலிருந்து.

கரடி ராயருக்குப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் பிரமாதமாக வந்துவிட்டது. சம்பு ஐயரோடு குடல் தெறிக்க ஓடினுர் முயல் அண்ணுவைப் பிடிக்க. இருவரும் வருகிற வேகத்தைக் கண்ட முயல் அண்ணு ஓடித் தப்பமுடியாது என்று தீர்மானித்துவிட்டார். அப்படியானுல் எப்படித் தப்பிப் பிழைப்பது?

யோசிக்க நேரம் இல்லை. அப்படியும் இப்படியும் திரும்பிப்பார்த்தார். மிடாத் தவளையாருடைய பெரிய சேற்று வளை தென்பட்டது. அதற்குள் எட்டிப் பார்த்தார். மிடாத் தவளையாரைக் காணவில்லை. கையில் இருந்த கூடையைப் புதருக்குள் மறைத்து வைத்தார். உடனே வளைக்குள்ளே புகுந்து சேற்றுக்குள் மூழ்கிப் படுத்துக்கொண்டார். கண்களைமட்டும் வெளியே நன்ருய்ப் பார்க்கும்படி வைத்துக்கொண்டார். கரடி ராயரும் சம்பு ஐயரும் அந்த இடத்துக்கு வந்ததும் முயல் அண்ணுவைக் காணவில்லை. அவர் எந்தப் பக்கமாகப் போனுர், எப்படி மறைந்தார் என்று அறிய ஆசை. யாரைக் கேட்கலாம்!

மிடாத்தவளையாருடையவளையை எட்டிப் பார்த்தார்கள். முயல் அண்ணுவின் கண்கள்மட்டும் வெளியே தெரிந்தன. மிடாத்தவளையார்தான் படுத்திருக்கிருர் என்று நினைத்துக்கொண்டு "மிடாத்தவளை அண்ணு! முயல் அண்ணு இந்தப் பக்கம் வருகிறதைப் பார்த்திரா?" என்று கேட்டார் ராயர்.

முயல் அண்ணு சேற்றுக்குள் மூழ்கிக்கிடந்த படியால் வாயைத்

திறந்து பேசமுடியவில்லை. ஆகையால் கண் ஜாடையால் "இந்தப் பக்கமாகத்தான் போனார் என்று குறிப்பாக உணர்த்தினார். வாயை மூடிக்கொண்டே இந்தப் பக்கமாக என்று ஏதோ ஒரு விதமாகத் தவளைக் குரல்போல் தொனிக்கும்படிப் பேசினார். கோபத்திலும், ஆவேசத்தாலும் கண் தலை தெரியாமல் இருந்த இருவரும் மேலும் ரஸ்தா வழியாக வெகுதூரம் ஓடினார்கள். அவர்களுடைய தலை மறையவே முயல் அண்ணா சேற்றுக்குள்ளிருந்து வெளியேறி புதருக்குள்ளிருந்த கூடையை எடுத்துக்கொண்டு தம்முடைய வீட்டைப் பார்த்து ஓட்டம் பிடித்தார். வீட்டுக்குப் போனதும் ஸ்நானம் பண்ணிவிட்டு, தமது மனைவி சமைத்துவைத்திருந்த பட்டாணிக் கறியை "சபாஷ்! ரொம்ப நன்றாக இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே சாப்பிட்டார்.

முயல் அண்ணா வளையைவிட்டு நீங்கினதும், ஈ—வேட்டைக்காகப் போயிருந்த மிடாத்தவளையார் வந்து சேர்ந்தார். அவர் வளைக்குள்ளே படுத்துக்கொண்டார் நடந்த சமாசாரம் ஒன்றும் தெரியாமல்.

முயல் அண்ணாவைப் பிடிக்கப் போயிருந்தவர்கள் அவரை எங்குமே காணாமல் திகைத்து நின்றார்கள். கரடி ராயருக்கு அடி பட்ட வேதனை ஒரு பக்கம். முயலண்ணாவின் பேச்சைக் கேட்டு ஏமாந்த வெட்கம் ஒரு பக்கம். இப்படிப்பட்ட நிலைமையில் தம்மைத் தப்பு வழியாகத் திருப்பிவிட்ட மிடாத்தவளையார் பேரிலே திரும்பியது கோபமெல்லாம்.

நரி அண்ணா, "அந்தப் பயலுக்கு இன்னொரு நாள் சரியான பாடம் கற்றுக்கொடுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே தம்முடைய வீட்டுக்குத் திரும்பினார். பட்ட அடிகள் இன்னும் வலி எடுத்துக்கொண்டிருந்ததினாலே ராயருக்குக் கோபம் தணியவில்லை. ஓடினார் தம்முடைய வீட்டுக்கு. ஒரு கோடாலியை எடுத்துக்கொண்டார் கையிலே, ஓட்டமாக வந்தார் தவளையின் வளைக்கு. அரைத் தூக்கத்தில் இருந்த மிடாத்தவளையார் விழித்துக்கொள்ளும் முன்னே அவருடைய கைகளைப் பிடித்துத் தூக்கினார். "அடே மோசக்காரா! என்னை தப்பு வழியிலா ஓடப்பண்ணினாய்?" என்று கத்தினார். மிடாத்தவளையாருக்கு விஷயம் ஒன்றுமே விளங்கவில்லை.

"ராயரண்ணா?... நமஸ்காரம்.... எதுக்கு?... நான் தங்களுடைய குடும்பத்திற்கு நெடுநாள் சினேகிதம்.... என்று.... ஏன் இப்படிக் கோவிச்சுக்... ஏன் இப்படிச் சீறுகி.... சொல்லுங்களேன்.... நான் தப்பொன்றும்... அண்ணா என்னை ஒன்றும் செய்யவேண்டாம்..." என்றெல்லாம் மூச்சுவிடாமல் பேசத் தொடங்கினார்.

"அடே! தப்பு வழியா காட்டுகிறாய் எனக்கு? உன்னை யமலோகத்துக்கு அனுப்ப வந்தேனடா!" என்று கத்தினார் ராயர்.

"தாங்களா? யமனா! யமன் இந்த ரூபமா?" என்று சொல்லிக்கொண்டே அழத்தொடங்கினார்.

"இப்போதே உன்னைக்கொன்று, உன் தோலை உரித்து... உன்னைச் சுட்டு... உன்னை வெந்து..." என்றெல்லாம் பல்லைக் கடித்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்தார் கரடிராயர்.

தவளையாருக்கு ஒரு யோசனையும் புலப்படவில்லை. ஒரு வழியும் தெரியவில்லை.

கரடிராயர் மிடாத்தவளையாரைக் கொல்வதற்காகக் காட்டுப் பக்கமாகத் தூக்கிக்கொண்டு போனார்,




## 7. பிரசாரமும் விசாரமும்

பிரசாரத்தின் அடிப்படை ஏதாவது ஒருவித விசாரம்தான். உதாரணமாக, ஒரு தேசம் தனது கொள்கையைப்பற்றி உலகெங்கும் பிரசாரம் செய்வதன் தாத்பர்யமென்ன?— தனது அந்தஸ்தைப் பற்றிப் பிறர் குறைவாக நினைக்கப்போகிறார்களே என்ற விசாரம்தான் காரணம். ஒரு கட்சியினர் தேர்தல் சமயங்களில் தங்கள் முற்போக்குத் திட்டங்களைப் பற்றிப் பிரசாரம் செய்வதேன்? தங்கள் கட்சிக்கு ஆதரவு கிடைக்காது போய்விடப்போகிறதே என்ற விசாரம்தான். தன் மதத்தின் உயர்வைப் பிரமாதப் படுத்தித் தொண்டை கிழியக் கத்தி ப்ரசாரம் செய்யும் தொண்டுக் கிழவர்களின் விசாரம்தான் என்னே! தம் மதத்திற்கு உயர்வு ஏற்படவேண்டும்: அனேகர் வந்து சேர வேண்டும்; பிரசாரமில்லையேல் வரமாட்டார்களே என்ற விசாரம்தான்.

இவ்வாறு ஒருவர் செய்யும் பிரசாரத்தால் வேறொருவருக்கு விசாரம் ஏற்படுவது இயற்கையல்லவா? உதாரணமாக, ஹிந்து மதத்தை விட்டுத் தம் மதத்திற்குவந்து சேரும்படி இதர மதத்தினர் பிரசாரம் செய்தால், ஹிந்து வகுப்பினரின் விருத்தியில் ஈடுபட்டுழைப்பவர்க்கு எவ்வித விசாரம் ஏற்படும்! அதன் பலனை அவர்களும் தமது மத மேன்மை சம்பந்தமான பிரசாரம் ஆரம்பித்து விடமாட்டார்களா?

நரசிங்கம்பட்டி சமஸ்தானத்தின் சரித்திரத்தில் முக்கிய சகாப்தம் என்று கருதப்படும் ரகுவீர சிம்ஹ மஹாராஜாவின் ஆட்சியின்போது நடந்த முக்கிய சம்பவங்களுள் இதுவும் ஒன்று. ராஜகுரு நிர்மலானந்த ஸ்வாமியின் தலைமையின் கீழ் பல சந்தர்ப்பங்களில் பிரசார இலாகா மும்முரமாக வேலைசெய்ய வேண்டி வந்தது. ஹிந்து மதத்தின் மேன்மையை ஹிந்துக்கள் மறக்கலாகாது; புறக்கணிக்கக்கூடாது. பிறப்புரிமையாய்க் கிடைத்த பெருமையை எக்காரணம் பற்றியும் இழக்கலாகாது என்று அடிக்கடி பிரசாரம் செய்யப்பட்டது.

இத்தகைய பிரசாரத்திற்குக் காரணம், பிற மதத்தினரின் பிரசார மும்முரம்தான். மேரிகுப்பத்தில் நடந்த ஒரு சம்பவத்தை விவரித்தாலே போதும்: நிர்மலானந்தரின் கொள்கை சரியானதுதான் என்று விளங்குவதற்கு.

* * * *

மேரிக்குப்பத்தின் அருகே ஹார் மோனிய ஸஹிதம் கோஷ்டிகானம் கேட்டதும் சேரி ஜனங்கள் பெருங் கூட்டமாகக்கூடி கோஷ்டியின ரைச் சூழ்ந்துகொண்டனர். அவர் கள் பாடிய பாட்டுகளின் ஸாகித்யம் பலருக்குப் புரியவில்லை. ஆனால் கூட்டத்தினர், வந்தவர்களின் நடை யுடை, அவர்களில் சிலர் தூக்கிவந்த கொடிகள் முதலியவைகளையே பார்த்து பிரமித்து நின்றனர்.

சங்கீதம் நின்றதும் ஒரு கிழவனர் சொற்பொழிவு ஆற்றலானார். "சர்வ சக்தியுள்ள ஆண்டவன் உங்கள் எல்லோரையும் காப்பாற் றட்டும். மனிதர் மாணிக்கம் தேவ தூதர் கிரிஸ்துபிரான் உலகோர் நன்மைக்காகவே தோன்றினர், தன்னை அர்ப்பணம் செய்துகொண் டார். சிலுவையிலறையப்பட்ட போதும் "இன்ன செய்கிறோமென் றறியாது செய்யுமிவர்களை மன் னிப்பாயாக, ஆண்டவனே!'' என்றே வேண்டுகிறார், தனக்குத் தீங்கிழைப்பவர்களைக் குறித்தே! என்ன தெய்வத்தன்மை! என்ன தியாகம்! மனித ரூபமாக வந்த நாதன் உத்தம பதவியை அடையும் வழியைக் காட்டி பரஞ்சோதியைக் காண உதவியிருக்கிறார். "மனிதர் யாவரும் சமம்; எல்லோரும் சகோ தரரே. நோய்வாய்ப்பட்டோரையும் வயோதிகரையும் காப்பது எல்லோ ருடைய கடமை. தர்மம் தலை காக் கும். கத்தி பிடித்தவன் கத்தியா லேயே மாண்டு போவான். உன் குணத்தாலும் நடத்தையினாலும் நீ மதிக்கப்படுவாய்'' என்றெல்லாம் போதித்து உலகத்தினரைத் தட்டி எழுப்பினர். அன்று அவர் ஏற்றிய ஞானதீபம் இன்றும் வாடாமணி விளக்காய் மின்னுகிறது. அவர் காட்டிய பாதையிலே பல கோடி மக்கள் சென்று சகோதரத்வமும் சமத்வமும் பெற்றிருக்கிறார்கள்.

பல இன்னல்களுக்குள்ளாகி யிருக்கும் நீங்களும் அந்தத் தூய வழியில் காலெடுத்து வையுங்கள். உங்களுக்கும் நல்லகாலம் பிறக்கும். தீண்டாதவர் என்று பலவிதத்திலும் இழிவு படுத்துகிறார்களே, அந்த அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்று தலைநிமிர்ந்து வாழ இதோ மார்க்கமிருக்கிறது. ஹிந்து மதம் ஆதிகாலத்தில் மிக உயர்வாய் இருந் திருக்கலாம். மலைச்சாரலிலிருந்து கிளம்பும் ஸ்படிக ஊற்றுப் பிரவா கம்போல் இருந்திருக்கலாம். ஆனால் இன்றோ, பல மேடுபள்ளங்களில் புரண்டு சகலவித அழுக்குகளையும் சுமந்துச் சாக்கடைத் தண்ணிபோ லவேயிருக்கிறது. இல்லாவிடில் 6 கோடி மக்களாகிய உங்களுக்கு ஏன் இவ்வளவு கொடுமை இழைக் கிறார்கள் உயர் வகுப்பினர்? மதம் மதம் என்று மதத்தின் பேரைச் சாக்கிட்டு மதம்பிடித்துத்தான் உங் களை அவர்கள் ஒதுக்கிவைத்திருக் கின்றனர். வாருங்கள் எங்கள் சமூ கத்திற்கு, வேற்றுமையற்ற சகோ தர சமத்வ சமூகமல்லவா எங்கள் வகுப்பு!''

விரிவாக நடந்த சொற்பொழி வின் சாரமே மேலே கூறப்பட்டுள் ளது. இத்தகையப் பிரசாரத்தின் எதி ரொலி யாது? கல்வி ஞானம் கிடைக் கப்பெறாத பலரிடையே இத்தகை யப் பிரசாரம் பலன் பெறுவதைக் கண்கூடாகக் காணவில்லையா? இத் தகையப் பிரசாரங்கள் சமஸ்தானம் முழுவதும் நடப்பதை அறிந்த மகா ராஜாவும் ராஜகுருவும் தமது ஹிந்து வகுப்பினரின் எண்ணிக்கையைக் காப்பதற்காகப் பிரசாரம் செய் வதில் பெரும் சிரத்தை எடுத்துக் கொள்ளலானார்கள்.

மகாராஜாவே கீழ்க்கண்ட செய்தியை மக்களுக்கு ஒலிபரப்பினர். ஒவ்வொரு ஊரிலும் சர்க்கார் ஒலிப்பெருக்கிகள் முன்பு ஜனங்கள் திரள் திரளாக நின்று பரபரப்புடன் கேட்கலாயினர். பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு :

"நமது ஹிந்து தர்மத்தை இழிவு படுத்தியும், தமது மதத்தைப் பிரமாதமாக உயர்வு படுத்தியும் இதர மதத்தினர் செய்து வரும் பிரசாரம் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. மதப்பிரசாரங்கள் செய்வதைத் தடுப்பது நமது கொள்கையல்ல. உண்மையில் மனமுவந்து ஒருவன் தம் மதத்தைவிட வேறொரு மதம் உயர்வானது என்று உணர்ந்து அந்த நம்பிக்கையிலேயே, அப்புதிய மதத்தைத்தழுவுவானாயின் நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏனெனில் ஒருவனுடைய மதமானது அவன் மனப் பரிபக்குவத்தையே காட்டுகிறது. அதே ஒருவன் காரியார்த்தமாகவோ, அல்லது அறியாமையினாலோ நம் மதத்தைப் புறக்கணிப்பானாயின் அதை ஆமோதிக்க முடியுமா? பெரும்பாலும் மதம் மாறுபவர்கள் பெண்ணிச்சைக்காகவோ அல்லது பண ஆசையினாலோதான்; உண்மையில் உயர்வு தாழ்வு தராதரமறிந்து மாறுபவர்களல்ல. இதை பிரத்யட்சமாகப் பல விடங்களில் காண்கிறோம்.

அவ்வாறு மதம் மாறியவர்கள் பிறகு வருந்துவதையும் காண்கிறோம். உதாரணமாக, மாதாகோவிலில் விசேஷ தினங்களில் ரொட்டியும் மதுவும் விநியோகம்செய்யப்படும்போது பரம்பரை கிருஸ்தவர்கள் தனியாகவும், "பறையாக்கிருஸ்தவர்கள்" தனியாகவும், பிராம்மண கிருஸ்தவர்கள் தனியாகவும், இது போல் பிறமதத்திலிருந்து கிருஸ்தவ மதத்திற்குவந்த அனைவரையும் தனித்தனிதான் நிறுத்துகிறார்கள், "கீழ்ப்பட்ட ஜாதி கிருஸ்துவன்" தொட்டு விட்டான் என்றும், தீட்டாகி விட்டது என்றும் புராதனக்கிருஸ்துவர்கள் அலறுவதும் ரகளை முற்றி அடிதடி சண்டை ஏற்படுவதையும் நம் சமஸ்தானத்திலேயே கண்டிருக்கிறேன். இங்கு ஹிந்து அடிமைத் தளையிலிருந்து விடுவித்து அங்கு இழிவு படுத்தலாமா என்ற கேள்வியை பக்ஷபாதமற்ற உயர்கிருஸ்துவர்களே கேட்கிறார்கள்.

மதம்மாறுவதுஎன்பது மகத்தான சிக்கலான விஷயம். அவனவன் தனதுமதமே தனக்குப் பிறப்புரிமை என்று உணர்ந்து தன்சமூகத்திற்கு எவ்வித சீர்திருத்தம் செய்யஇயலுமோ அதைச்செய்ய முன்வர வேண்டுமேதவிர மதம் விட்டு மதம் மாறுவது உசிதமில்லை. மற்றொரு மதத்தினிடமோ, வகுப்பினரிடமோ த்வேஷ மனப்பான்மையே கூடாது. அவரவர் தம் முன்னோர் காட்டிய வழியே செல்ல வேண்டும். எல்லா வழிகளும் ஒரே இடத்தை நோக்கித் தான் செல்கின்றன : அப் பரம் பொருளின் திருவடி நிழலில் ஒதுங்குவதைத்தான் எதிர்பார்க்கின்றன.

மதம் என்பது பெற்ற தாயைப் போன்றது. தாயிடத்தில் தோன்றும் நிகரற்ற வாத்ஸல்யம் நம் மதத்தினிடத்தும் அபரிமித பக்தியாகப் பரிணமிக்க வேண்டும். வேறொருத்தி எவ்வளவு நல்லவளாயும் பிரீதியாயுமிருந்தாலும் தாய்க்குச் சமமாகமுடியுமா? தாயைப் புறக்கணித்து அயலாளிடம் விசுவாசம் காட்டுவதெப்படி? தன் தாயைவிட மற்றவள் உண்மையில் உயர்ந்தவளா என்ற சிந்தனை எழுவேண்டும். நம் தாயும், தாய்நாடும் நமக்கு எப்படியோ அப்படியே தான்


நம் ஹிந்து மதமும் என்பதை மறக்கலாகாது.

ஹிந்து தர்மம் மிகப் பழமையானது. உத்தமமானது. அதில் இல்லாத எந்தக் கொள்கையையும் புதிதாக எந்த மதமும் கண்டுபிடித்துக்கொண்டு வந்துவிடவில்லை. காலச்சக்கரம் சுழன்று வருகையில் பல பல அதிசய மாறுதல்களை எக்கும் கண்டு கொண்டே வருகிறோம். எல்லா மதங்களின் ஸாரமும் ஒன்றே. எதையும் உணர்ந்து கடைபிடித்தொழுக மனமே காரணம்.''

* * * * *



மேரிக் குப்பத்தில்படிப்புவாசனையற்ற சேரி மக்களிடையே மேற்படி இரு பிரசங்கங்களும் பெரும் கலக்கத்தை விளைவித்தன, அதேபோல் தான் பல விடங்களிலும். இந்தப் பிரசங்கம் நடந்த மறுநாள் காலை தான் மாரியை வீட்டில் காணவில்லை, காளியம்மா வீடு முழுதும் தேடியதில் ஒரு கடிதம் (மாரியின் கைப்பட எழுதியது) அகப்பட்டது. அதைப் பிரித்துப் படித்தும், தன் கண்களையே தான் நம்பாது, பேரிடியும் மின்னலும் தாக்கியதுபோல் அலறினாள். அவள் முகத்தில் தோன்றிய பயங்கரமும் பரிதவிப்பும் அவளது இதயக் கடலில் அடிக்கும் அகோரப்புயலை வெளியிட்டன. இப்படியும் நடக்கவேண்டுமாவென்று துடித்தாள்; இந்த விசாரத்தைத் தன்னால் தாங்க முடியுமாவென்று கல்லாய்ச் சமைந்தாள்.



உன்னை நான் எப்படி நேசிக்கிறேன் என்பதை உள்ளபடி நீ அறியவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். அறிந்திருந்தால் நீ என்னை செய்யும் சகல விதமான அலக்ஷியத்தையும் அவமானத்தையும் பொறுத்துக்கொண்டு உன் காலடியில் நான் கிடப்பேனா? சுலோசனா! என்மனத்தை நீ நன்றாகத்தெரிந்து கொள்ளு. வீணாகப் புண்படுத்தாதே. கலை, கலை என்று செய்யும் காரியத்தை உன் பின்னால் உலகம் எப்படி இழிவாகப் பேசுகிறதென்பதை நீ அறவே உணரவில்லை, அந்த அவமானத்தை என்னால் சகிக்கவும் முடியவில்லை. உன்னைக் கண்டிக்கவும் அன்பு இடந்தரவில்லை. த்ருசங்கு ஸ்வர்க்கமாக நான் அல்லாடுகிறேன்.

ஒருவருக்கு மாலையிட்ட பின்னர் ...ஏன்...சரியான யுக்தவயதடைந்த பின்னர், ஒரு பெண் அன்னிய ஆடவனுடன் ஆடுவது கேவலத்திலும் கேவலம். ஜோடியான பெண்களுடன் கலையின் ஆர்வத்தில் வேண்டுமானால் ஆடட்டும். அன்னியனுடன் ஆடுவதற்கு என் மனம் இடங்கொடுக்கவில்லை. நம்நாட்டைக் கூட மேல்நாடு என்று எண்ணி கண்ட ஆடவனுடனும் குதிக்கும்

கேவலமான நிலைமை அடைய வேண்டாம். உன்னை நான் வேண்டாமென்று சொல்லவில்லை, அன்னியனுடன் ஆடாதே என்றுதான் சொல்லுகிறேன்...

என்று அவன் சொல்லிக்கொண்டே இருக்கையில் சுலோசனா தேம்பித்தேம்பி அழத்தொடங்கி விட்டாள். அன்பு மயமாய் ஜ்வலித்த கண்களில் ஆத்திரக் கனல் ஜ்வாலை வீசுகிறது. விம்மி விம்மி அழும் வேகத்தில் என்ன சொல்கிறோம் என்பதைக்கூட மறந்து "பணத்தில் பிறந்து பணத்தில் வளர்ந்து பணத்தின் அருமை தெரிந்திருந்தால் இப்படிப் பேசுவீர்களா! தரித்திரத்திலேயே உழன்றவர்களுக்கு அறிவும் தரித்திரமாகி விட்டது. பாழாய்ப்போன அக்காரகன் என்னை இப்படிப் பாழ்படுத்துவானா...என் தலைவிதி இப்படியாகுமா!" என்று கூறிக்கொண்டே சடக்கென்று வெளியே சென்றாள்.

சில நிமிஷத்திற்கெல்லாம் கார் வீதியில் வந்து நின்ற ஓசை கேட்டது. "உம்...தகப்பனார், வந்து அழைத்துச் சென்றார். மகளும் போய்விட்டாள். நடக்கட்டும். ஆண்டவன் எழுதியுள்ள விதிக்கு விலக்காக என்ன செய்ய முடியும்?' என்று ஒரு பெருமூச்சு விட்டான். அவனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. அவள் என்னவோ ஆடாமலிருக்கப் போவதில்லை. அந்த அவமானத்தைப் பார்த்துக்கொண்டு இங்கு இருக்கவும் பிடிக்கவில்லை.

சில பேமானிகள் மனைவியைச் சினிமாவிலும் நாடகத்திலும் நாட்டியத்திலும் சேர்த்துவிட்டுக் கூத்தடிப்பதைத் தானும் பின்னாலேயே போய் பார்த்து பல்லை இளித்துக் கொண்டு நிற்பதோடு, அவள்தான் என் மனைவி என்றும் கூசாமல் வெட்கமின்றி கூறிக்கொண்டு வால் பிடித்துத்திரிகின்றார்களே அவர்களுடைய மனது எப்படித்தான் உணர்ச்சியற்று செத்துவிட்டதோ ஆச்சரியமாயிருக்கிறது. என் சுலோசனா மகா பரிசுத்தவதி என் பதில் ஆக்ஷேபனையே இல்லை. அதை அறிந்தும் என் மனது இச்செய்கையை பலமாகத் தாக்கி வெறுக்கின்றதே. அந்த முண்டங்களைப் போல் சகிக்க முடியவில்லையே... சீச்சீ......மணி இன்னும் 9 ஆகவில்லை. இப்போதே எங்கேனும் போய் விடுவோம் என்று ஒரு வீரா வேசமும் வெறுப்பும் தோன்றியதால். வேலைக்காரனிடம் வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லி விட்டு வெளியே சென்றான். அவன் மனம் படும் வேதனையை அளவிடச் சாத்யமேது ?"

## 6

### ஏமாற்றம்! ஏமாற்றம்!!

"இந்திய சிப்பாய்நிதிக்காக என்று மாக்ஷிமை தங்கிய கவர்னர் தம்பதிகளின் முன்பு நடந்த நாட்டியத்தில் பணவசூல் ஏற்கெனவே ஆயிருந்ததால் அவ்வகையில் ஏமாற்றமில்லை. நிதிக்கு 10 ஆயிரம் ரூபாய் கவர்னர் கையில் கொடுக்கப்பட்டது. நாட்டியத்தில் பெரும் ஏமாற்றம் உண்டாகியதால் கொட்டகையில் கலாட்டாவும் கல்லடியும் கூச்சலும் விபரீதமாக உண்டாகிவிட்டதால் போலீஸார் லாத்தி சார்ஜ் செய்து அடக்கும்படியாயிற்று.

இதற்குக் காரணம், நாட்டிய அரசி எனப் புகழ்பெற்றுள்ள ஸ்ரீமதி சுலோசனாதேவிக்கு பலமான ஜுரம் கண்டதால் அவருக்குப் பதில் வேறு ஒரு பெண்மணி ஆடியதே யாகும். சுதர்சனும் வெகுமட்டமாகவே ஆடினார். ஆடியவருக்கு நாட்டியக்கலையில் நல்ல தேர்ச்சியிருந்

தம் பாவம்! அந்தம்மாள் 'எந்த கடையில் அரிசிவாங்கிச் சாப்பிடு கிறாரோ?' என்று வியக்கும்படி ஒரு குட்டியானையின் தோற்றத்தில் வந்து தா...தை...என்று குதிக்கும் போதுகண்களைக்கெட்டியாக மூடிக் கொண்டு எழுந்து ஓடிவிடலாமா என்று தோன்றியதால் காலரி கன வான்களிடமிருந்து ஏகப்பட்ட கூச் சல் உண்டாகிவிட்டது. கவர்னர் தம்பதிகள் அரைமணி நேரங்கூட அங்கில்லை. அதற்குள் சிரித்துச் சிரித்து கவர்னரின்மனைவிக்கு ஒரு முறை விக்கல்கூட வந்துவிட்டது.

இதை ஏற்பாடு செய்தவர்கள் சரி யான பெண்மணியைப் பொறுக்கி இருந்தால் நாட்டியம் நன்றாயில்லை என்றாலும் அழகையாவது பார்த்துக் கொண்டு ஜனங்கள் உட்கார்ந்திருக் கக்கூடும். சுலோசனாவின் நாட்டியம் என்ற விளம்பரத்தினால் இத்தனை ஆயிரம் பணம் சேர்ந்ததேயன்றி இந்த ஜோடியானையின் நூறு ரூபாய் கூட கொடுத்திருக்கமுடியாது. கவர்னர் தம்பதிகள் சென்றதுமே கலாட்டா அதிகமாய்விட்டதால் நாட்டியமே நிறுத்தப்பட்டது.

ஏற்பாடு செய்தவர்களைக் கேட்ட தற்கு "திடீரென்று சுலோசனாவுக்கு 105 டிகிரி ஜுரம் வந்துவிட்டதால் அப்போது அவசரத்தில் ஏற்பாடு செய்ய எவரும் கிடைக்கவில்லை. இருப்பதற்குள் இவர்தான் அந்த அவசரத்திற்குக் கிடைத்தார். ஒன் றுமே இல்லாமல் நின்றுவிடப் போகிறதே என்று இப்படி ஏற்பாடு செய்தது. தடியடித் தாண்டவத்தில் முடிந்ததற்கு மிகவும் வருத்தப்படுகி றோம்" என்று சொல்லிவிட்டார்கள்.

வேண்டுமென்றே ஒருவரின் பெயரைப்போட்டு பணத்தைப் பறித்துக்கொண்டு மோசம் செய்து விட்டார்கள் என்ற கூக்குரலும் எழும்பியது. தங்கப்பதக்கம் பரிசு கொடுக்கவில்லை."

என்கிற மகத்தான அதிர்ச்சி உண்டாக்கும் செய்தியைப் பத்திரி கையில் படித்த ரகுவின் இதயத்தில் ஒரு க்ஷணம் அமிருதம் தோய்ந்தது போன்ற சந்தோஷமும் ஆனந்த நிறைவும் உண்டாயின. அடுத்த க்ஷணமே "என் சுலோசனாவுக்கு ஜுரமா...105 டிகிரியா! ஐயோ! இதென்ன ஆபத்தான செய்தி... கடவுளே! என் பங்கில் நீ எங்கி ருந்தோ மறைந்து உதவிசெய்து என் சுலோசனாவின் மானத்தைக் காத்தாய். அவள் ப்ராணனையும் காத்து ரக்ஷிக்கவேண்டும்" என்று மனதார ப்ரார்த்தனை செய்தான்.

அவனால் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உடனே ஓடிவந்து பார்க்க ஆசை தூண்டுகிறது. தான் அன்று ஆடவேண்டாமென்று கூறிய அதிர்ச்சியினால்தான் உடம் புக்கு வந்துவிட்டது என்று திட்டு வார்களோ! உம்....எப்படிவேண்டு மாயினும் சொல்லட்டும். இம்முறை பகவான் என் பங்கிலிருந்தார். அதுவே போதும். நான் உடனே சென்று என் கண்மணியைப் பார்க் காவிட்டால் என்னுள்ளம் சகிக் காது...என்று தீர்மானித்தவனாய் உடனே கிளம்பினான். அவனுடைய கற்பனையுலக சஞ்சாரத்தில் ஏதே தோ தோன்றிக்கொண்டிருந்தது.

## 7

வீட்டில் எஜமானர்கள் இருக்கும் போதே சில வேலைக்காரர்களின் அட்டகாஸமும் அமுத்தலும் ஆர்ப் பாட்டமும் சொல்லிமுடியாது. எஜ மானர்களே இல்லாத வீட்டில் கேட்கவேண்டுமா? ரகு ஊருக்குப் போய் நான்கு நாட்களாகிவிட்டன. இன்று வீட்டிற்கு வரும்போது குழந்தைகளும் குட்டிகளும் வீடு

நிறைந்திருந்ததைக் கண்டு வியப்புற்றான்.

உள்ளே வந்து பார்த்தால் த்வம்ஸம் செய்து சாமான்களை நிர்த்தூளியாக்கியிருப்பதைக் காண சகிக்கவில்லை. கடிகாரம் நின்றுபோயிருப்பதுடன் இருந்தால் கவலையே இல்லை. அதனுள்ளிருந்த பெண்டுலம் விளையாட்டுக் கருவியாக ஒரு குழந்தையின் கையிலிருந்தது. அலாரம் டயம்பீஸ் கண்ணாடி உத்திரவு பெற்றுக் கொண்டு குப்பைத் தொட்டிக்குப் போய் விட்டதால் அதை ஒரு குழந்தை வைத்துக்கொண்டு மற்றக் குழந்தைக்கு முள்ளை ஆட்டி ஆட்டி விளையாட்டு காட்டிக்கொண்டிருந்தது. ஷேவிங் ஸெட்டு முதல் சகலமும் தாறுமாறாகக் கிடப்பதைக் கண்டு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

இவனைப் பார்த்தவுடனே வேலைக்காரன், "சார்! எங்க மனுஷாள் வந்திருப்பதால் இந்த வீட்டை விட்டு நான் போக முடியாமல் அவர்களையும் இங்கேயே இருக்கச்செய்தேன்; வீட்டிற்கும் காவலாக இருந்தது. நீங்கள்தான் வந்துவிட்டீர்கள். நான் போய்வருகிறேன், ஒருவாரம் லீவு வேண்டும். சமயல்காரம்மா ஊருக்குப் போயிருக்கிறார்கள். வருவதற்கு ஒரு மாதமாகுமாம்...என்று கூறிவிட்டு வெகு மூடுக்காக அவர்களுடன் நடந்தான்.

வீடிருக்கும் அலங்கோலத்தில் தன்னிடமுள்ள குற்றத்தையும் கவனியாமல் இப்படிப் போனவனின் மீது வந்த எரிச்சல் கூறத்திறமில்லை. வீடு பெருக்கும் வேலைக்காரியின் உதவியால் வீட்டை ஒருவாறு சுத்தமாக்கினான். மாமனார் வீட்டிற்குப் போகவும் மனது ஏதோ ஒருமாதிரி செய்தது. சுலோசனாவைப் பார்க்காமலிருக்கவும் மனம் கேட்கவில்லை. மெல்ல சமாளித்துக்கொண்டு மாமனார் வீட்டிற்குச் சென்றான்.

அங்கு தனக்குக் கிடைக்கப் போகும் மரியாதையை அவன் உள்ளம் ஏற்கெனவே நன்கறிந்து அதை ஒருவாறு சித்திரித்துக் கொண்டுமிருந்தது. இருப்பினும் சுலோசனாவிடம் அவன் கொண்டிருக்கும் அன்பின் ஆழமும் ப்ரேமையின் ஜ்வாலையும் அவனை அவமரியாதை செய்தாலும் ஏற்கத்தயாராயிருந்தன. வாசல்படியில் ஏறும்போதே தேகம் அவனையறியாது ஏதோ செய்து கிடுகிடென்று நடுங்கியது. அதைச் சற்று சமாளித்துக்கொண்டு உள்ளே சென்றான். முதல் கேட்டில் நிற்கும் வழிமறித்தான் சாமி, எப்போதும் மருமகப் பிள்ளைக்கு ஒரு கும்பிடு போட்டு "சாமீ! தண்டங்க" என்பது வழக்கம் ஆனால், இன்று வழக்கத்திற்கு விரோதமாய்...முகத்தைத் திருப்பிக் கொண்டு "சார்! தயவுசெய்து இப்படியே நில்லுங்கள் யாராயிருந்தாலும் உள்ளே வரக்கூடாதென்பது என் எஜமானரின் உத்திரவு"......என்று கடினமான தொனியில் கூறினான். இதை ரகு ஏற்கெனவே எதிர்பார்த்ததுதான்... "ஓஹோ! அப்படியா! மெத்த சந்தோஷம். உங்கள் சின்ன எஜமானியம்மாளுக்கு உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டேன். பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். உடம்பு தேவலையா......அதுகூட சொல்லக் கூடாதென்று உத்திரவோ?" என்றான்...

வேலைக்காரன்:—"சார்! வேலைக்காரனிடம் அவைச்யமான பேச்சுகள்வேண்டியதில்லை. உடம்பு ஆபத்தான நிலைமையிலிருப்பதனால்தான் யாரையும் உள்ளே விடக்கூடாதென்று உத்திரவு. கவர்னரின் ஸம்ஸாரம் இன்று மாலை நேரில் வந்து

பார்த்துவிட்டு அம்மாளுக்காகச்செய்திருந்த தங்கப் பதக்கத்தைத் தாமே கொடுக்கப் போகிருர்கள். ஆகையால் உள்ளே ஏகப்பட்ட தடபுடல் ஏற்பாடுகள் நடக்கின்றன. ஒருவரும் போகக்கூடாதாம்...

ரகு:—நான் கூடவாப்பா போகக் கூடாது?...

வேலை:—நீங்கள் என்றும் இன்ஞெருவர் என்றும் எனக்கு உத்திரவில்லை. யாரையும் விடக்கூடாது என்பதுதான் கட்டளை—என்ருன். ரகுவின் இதயத்தில் செம்மட்டியாலறைவதுபோன்ற அதிர்ச்சியும் சகிக்க முடியாத வேதனையும் உண்டாகியது. அன்பின் தவிப்பும், அவமானத்தின் துடிப்பும் பாதிக்க பதிலே பேசாமல் திரும்பிவிடலாமா என்று சற்று எண்ணினன். ஏன்? இவனையும் மீறிக்கொண்டு உள்ளே போனல் என்ன நேர்ந்துவிடும் அதையும் பார்த்துவிடுவோமே... என்றும் எண்ணினன்.

"நடுவீதியில் பலர் முன்னிலையில் அவமானம் நேரப்போவதை நாமே ஏன் வரவேற்கவேண்டும். உம்... விதி"...என்று மனம் சலித்தபடியே திரும்பிவிட்டான். வீட்டிற்குப் போகக் கால்கள் எழவில்லை. இவர்களுடைய குடும்ப வைத்தியரான கோவிந்தரிடம்போய் விசாரித்துவிட்டால் நிலையை அறியலாம் என்று தோன்றியதால் தடதடவென்று டாக்டரிடம் சென்ருன்.

டாக்டரின் வீட்டில் கணக்கு வழக்கற்ற நோயாளிகள் காத்திருப்பதை யறிந்து "உம்...இத்தனை பேர்களையும் வைத்துவிட்டு நம்மிடம் பேசப்போகிருரா?... ஆம்....நாமும் அதிகமான வயிற்றுவலியால் உபத்திரவப்படுவதாகக் கூறிக்கொண்டு உள்ளே போய்விடுவதுதான் சரி" என்று எண்ணியவாறு தடதடவென்று உள்ளே சென்ருன்.

ஏற்கெனவே இவன் அவருக்கு நன்ருகத் தெரியுமாதலால் இவனைக் கண்டதும் புன்னகை புரிந்தார்... "என்ன உடம்பு...சுலோசனவுக்காக வந்தீர்களா?...என்று அவரே முன் கூட்டிக் கேட்டதால் மிக்க சந்தோஷத்துடன், "ஆமாம். என்ன உடம்பு, எப்படியிருக்கிறதென்று கேட்டறியவே வந்தேன். ஊரிலிருந்து இப்போதுதான் வருகிறேன்...

என்று முடிப்பதற்குள் 'ஓகோ! நான் நினைத்தபடிதான் நடந்திருக்கிறது. நீர் பார்க்க விட்டார்களோ! உம்மால்தான் இந்த உடம்புக்கு வந்துவிட்டதாகவன்ருே உமது மனைவியும் மாமனும் முடிவாகக் கூறுகிருர்கள்...சார்!...நான் என்னவோ பொது மனுஷ்யன். ஆயிரக்கணக்கணக்கான ஸ்த்ரீகளுக்கு வைத்தியம் செய்தும், பல நர்ஸ்களிடம் பழகியும் உழைக்கும் தொழில் படைத்தவன். இருப்பினும் உமது மாமனரின் கொள்கையை நான் கூட வெறுப்பவன்தான். என் அபிப்ராயத்தை யார் கேட்பவர்கள்? நீர் அந்த நாட்டியக்காரனுடன் ஆடக்கூடாதென்று சொல்லிய அதிர்ச்சியிலைதான் தன் உடம்புக்கு வந்துவிட்டதாக அவர்கள் ஒரே தீர்மானமாகப் பேசுகிருர்கள். அவர்கள் எண்ணம் நிறைவேருது போன அதிர்ச்சிகூடக் காரணமாயிருக்கலாம். கடவுள் ஏதோ நல்ல எண்ணத்திற்காகத்தான் இந்த ஜுரத்தை வரவழைத்தார்.

அந்த நாட்டியக்காரனைப் போன்ற கெட்டுப்போனவன் யாருமே இல்லையாம். அவனுடன் நாட்டியமாடும் ஸ்த்ரீகள் அவனை விடுவதேயில்லையாம். அதிகமான துர்நடத்தையிஞல் அவனுக்குப் பல விதமான நோய்களுண்டாகி என்

சினேகிதர் முகுந்தலால்தான் வைத்தியம் செய்தாரராம், அவரை நான் அகஸ்மாத்தாகச் சந்தித்தேன். "உமது பேஷண்டு சுலோசனவா அந்த அழுகப்பிண்டத்துடன் ஆடப் போகிருள்?"...என்று ஏளனமாகக் கேட்டதோடு அவள் விஷயத்தை யும் கூறினர். பெற்றோர்களும் அவளுமே அந்த மான அவமானத்தை அறியாதிருக்கையில் நான் எப்படிச் சொல்வதென்றிருந்தேன்...

ஏதேதோ எதிர்பார்த்து காக்காய் பிடிப்பதற்காகச் செய்திருந்த ஏற்பாடு முறிந்துவிட்டதால் அனியாயமாய்ப் போய் விட்டதே என்று வயிற்றெரிச்சல் வந்துவிட்டது...... சரி...பேஷண்டுகள் ஏராளமாய்க் காத்திருக்கிருர்கள். உயிருக்குப் பயமில்லே: ஜுரம் கடுமையாகத்தான் அடிக்கிறது. மருந்துகொடுத்து வருகிறேன்...... ஏன்....... என்ன தியக்கம்...

ரகு:—ஒன்றுமில்லை. வெட்கத்தை விட்டு வெளியில் சொல்ல மனம் கூசுகிறது. நான் சுலோசனவிடம் என் உயிரையே வைத்துள்ளதை சர்வேசன்தான் அறிவான் அவளுடைய சகலமான ஆசையையும் என்னல் முடிந்தவரையில் பொறுமையுடன் பூர்த்தி செய்துதான் வருகிறேன். இந்த ஒரு விஷயம் என் மனத்திற்கு அடியோடு பிடிக்காததால் இதை மட்டும் வேண்டாமென்றும் வேறு பெண்மணியுடன் இதே ஆட்டத்தை ஆடி உன்னிஷ்டப்படி சந்தோஷமடை என்று கூடச் சொன்னேன். உம்...என்னுடைய ஆசையின் ப்ரவாகத்தை அவர்கள் யாருமே அறியாதது என் தலைவிதியின் தாண்டவந்தான். எது எப்படியாவது ஆகட்டும். என் சுலோசன பிழைத்தால் போதும். அவளைப் பார்க்கவேண்டுமென்று மனது தவிக்கின்றது. வெட்கத்தை விட்டும் போனேன். உள்ளேவிட உத்திரவு இல்லையாம். காவற்காரன் மறுத்துவிட்டான்...பார்க்காது வருவதற்கு மனம் சகிக்கவில்லை. உங்களிடமாவது விசாரித்துக்கொண்டு போகலாமென்று வந்தேன்.

டாக்டர்:—சரி! ஒன்று செய்யலாம். இன்று நான் காலையில் போய் வந்தாய்விட்டது. மாலை ஆறு மணிக்கு மறுபடியும் போவேன். எனக்கு உள்விஷயம் எதுவும் தெரியாததுபோல் உங்களைக் கூட அழைத்துப்போகிறேன். சென்ற பிறகு எது நடந்தாலும் அனுபவிக்கத் தயாராயிரும்...மாலை ஆறு மணிக்கு இங்கு வந்துவிடும்—என்று கூறி ரகுவை அனுப்பினர். அத்தனைக் குழப்பத்திலும் டாக்டரின் வார்த்தை ரகுவின் மனத்திற்கோர் ஆறுதலையளித்தது.

## 8

தலைமீது ஐஸ் வைத்துக்கொண்டு நர்ஸ் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கிருள். சுலோசனவின் தகப்பனர் ஒரு கத்தை கவர்களை கையில் வைத்துக்கொண்டு "இத்தனையும் மகா ரஸிகசிகாமணிகளும் சினிமா முதலாளிகளும்எழுதியிருக்கிருர்கள். அன்று நீ நாட்டியமாடாத குறை இவ்வளவு அவ்வளவு இல்லையாம். உனக்குப் பூர்ண குணத்தை யளித்துக்காக்க ஆண்டவனை வேண்டுகிருர்களாம். ஒரு முழு கதைக்கும் நாட்டியத்தையே ஜீவநாடியாய் வைத்து ஒரு படமுதலாளி படம் பிடிக்கப்போகிருராம். அந்த பாத்திரத்தை உனக்கேகொடுக்க அவர்கள் காத்திருக்கிருர்களாம். முதல் படத்திற்கே அரைலக்ஷம் ரூபாய் கொடுக்கத் தயாராம். உன்னுடன் நடிக்க சுதர்சன் ஒப்புக்கொண்டிருக்கிருராம்.......ஒரு படமுதலாளி எழுதி

யிருக்கிறார். உன் பெருமையை உலகமறிந்ததுபோல் உன்னைக் கட்டிய பாவி அறியாமல் மண்ணைப் போட்டுவிட்டானே !"...என்று ஒப்பாரி வைத்தார். சுலோசனாவின் கண்களில் கோபக்கனல் பறந்தது. அச்சமயம் நாட்டிய அரசன் சுதர்சன் வந்திருப்பதை வேலைக்காரன் தெரிவித்தான்.

உடனே அவள் தகப்பனார் ஓடிப்போய் அவனை அழைத்துவந்து தடபுடல் உபசாரத்துடன் உட்கார வைத்தார். "அம்மா! குழந்தாய்... இதோ யார் வந்திருக்கிறார் பாரு... என்று கூறியதும் சுலோசனா அவளது தாமரை இதழ்க்கண்களை விசாலமாகத் திறந்து புன்னகையுடன் வரவேற்று கைகளைக் கூப்பி வந்தனம் செய்தாள். "நான் கொடுத்து வைக்காது போய்விட்டேன். உங்களுடன் ஆடிப் புகழ்பெறும் பாக்யமில்லை...உடம்பு நன்றாகக் குணமானதும் மறுபடியும் அப்பாக்யம் கிடைக்கவேண்டும்" என்று சுதர்சன் கூறியபடியே சுலோசனாவின் கரங்களைப் பிடித்துக்கொண்டான்.

அதேசமயம் டாக்டரும் ரகுவும் உள்ளே நுழைந்தார்கள். டாக்டருடன் ரகு வருவான் என்று யாருமே எதிர்பாராததால் ப்ரமித்துவிட்டார்கள். சுலோசனாமட்டும் சுதர்சன் கைப்பிடியிலிருந்து தன் கைகளை உடனே விலக்கிக்கொண்டாள். ரகுவின் வரவைக்கண்ட உடனே அவன் மாமனாரின் முகமே மாறிவிட்டதை டாக்டர் அறியாமலா போவார்?

சுலோசனா வெறுப்பும் ஆத்திரமும் ஜ்வலிக்கக் கண்களை மூடிக்கொண்டு திரும்பிப் படுத்தாள். டாக்டர் ரகுவின் முகத்தைப் பார்த்தார். ரகுவின் கண்களில் ஜலம் குளம்போல் தேங்குவதைக் கண்டு உள்ளுக்குள் பச்சாத்தாபப்பட்டவாறு சுலோசனாவைப் பரிக்ஷித்தார்.

இத்தனைபேர் முன்பு ரகுவை அவமானப்படுத்த வேண்டுமென்றே அவன் மாமனாரின் உள்ளம் துடித்தது. ஆனால் அவருடைய சகதர்மிணி ஓடிவந்து கணவனுக்கு ஜாடை காட்டி ஒன்றும் செய்யாமலிருக்கும்படியும் அப்படிச் செய்தால் தமக்கு தீராத அபவாதம் வரும் என்றும் சமிக்ஞை செய்தாள். அதனால் மவுனம் சாதித்தார்.

கவர்னரின் மனைவி இரவு 7 மணிக்கு வரப்போவதால் பங்களாவின் அலங்காரம் தடபுடலாக விருந்தது. ரகு அருகில் போகலாமா வேண்டாமா என்று சற்று தியங்கினான். மனது கேட்காததால் தானாகவே சுலோசனாவின் அருகில் சென்று, "சுலோசனா !"...என்று மெல்ல கனிந்த அன்புடன் கூறி அவள் கரங்களைத்தடவி முகத்தையும் மெல்ல வருடினான்.

சுலோசனா பதிலே பேசாமல் மற்றொரு புறம் திரும்பிப் படுத்தாள்... "அவளுக்கு 105 டிகிரி இருக்கும் போது தொந்தரவு கொடுக்கவேண்டாம்...என்ன டாக்டர்... இப்போது கம்பிளீட்டு ரெஸ்டுதானே வேண்டும் ?"......என்று சுலோசனாவின் தகப்பனார் கேட்டார்.

டாக்டர் என்னபதில் சொல்வார் பாவம்!... மவுனமே சாதித்ததோடு மருந்தை எழுதத் தொடங்கினார். ரகுவின் கரத்தை சுலோசனா வெடுக்கென அப்புறப்படுத்திவிட்டு முகத்தைச் சுளித்துக்கொண்டதும் ரகுவின் கண்களில் தேங்கிய ஜலம் சல சலவென்று பெருக்கெடுத்தது. மறுபேச்சின்றி வேகமாக வெளியே சென்றான். டாக்டர் அவன் போவதைப் பார்த்துப் பெருமூச்செறிந்த ரகஸியம் யாருக்கும் தெரியாது.

அவர் மருந்து எழுதிக்கொடுத்து விட்டுக் கிளம்பினர்.

அச்சமயம் சுலோசனவின் பிதா, "டாக்டர்! இன்னும் அரைமணிநேரம் இருந்துவிட்டுப் போகக்கூடாதா! மேன்மைதங்கிய கவர்னரின் மனைவி வரப்போகிறார்கள். தாங்கள் கூடவே இருந்தால் மிக்க சந்தோஷமாயிருக்கும். அவ்வம்மையார் தாமாகவே வலுவில் வருவதாயும், அன்று கொடுக்க முடியாது போன பதக்கத்தை நேரில் கொடுத்துவிட்டு சுலோசனவை ஸ்பெஷலாக பார்த்துவிட்டுப் போகவெண்டுமென்றும் சொல்லியனுப்பியிருக்கிறார்கள். ஒரு பெரிய கவர்னரின் மனைவியே இப்படிச் சொல்லியனுப்புவதென்றால் அது எத்தனை மேன்மையானது பாருங்கள்.

உங்களுக்குத்தான் சகலவிஷயங்களும் தெரியும். நான் திரும்பவும் சொல்லவேண்டாம். இத்தனை உடம்பிற்கும் காரணம் அந்த அல்ப புத்தியுடைய ராஸ்கல்தான்......கவர்னரின் மகளுக்கு அடுத்த மாதம் கல்யாணமாம். அதற்கு இந்திய நாட்டின் சிறந்த கலையான பரத நாட்டியக் கச்சேரி வைத்துத் தமது ஜனங்களுக்குக் காட்டவேண்டுமென்று ஆசையாம். அதுவும் காற்று விசேஷமாய் காதில் பட்டிருக்கிறது. அம்மாதிரி கண்ட நடந்துவிடுமாயின் சுலோசனவின் புருஷனுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் அப்போதே வேலை கிடைத்துவிடுமல்லவா! இதே சுதர்சனுடன் ஆடவேண்டுமென்று கவர்னர் மனைவி விரும்புகிறார்களாம்.

கல்யாணம் சீமையில் நடக்கப் போகிறதாம். இந்த சாக்கில் வெகு சுலபமாக வெளியூர் சுற்றிப் பார்க்கவும் பலபெரிய மனிதர்களின் செல்வாக்கும் சிநேகமும் ஆதரவும் கிடைக்க மார்க்கம் தானாக ஏற்பட்டு விடாதா சார்! பிழைக்க வழி தெரியாமல் அந்த மனிதன் இருப்பதைக் காண எனக்குப் பற்றி எரிகிறது. இந்த நாட்டியத்திற்கே அவன் மனைவியைக் கட்டுப்படுத்தி விட்டதான வதந்தி கலெக்டர் வரையில் எட்டிப் போய் இந்த முட்டாள்மீது அபாரமான கோபத்திலிருப்பதாகக் கேள்விப்பட்டு என்னுள்ளம் நடுங்குகிறது. இந்த அழகான சம்பளமும் போய் வேலைபோய் விட்டால் சோத்துக்கு அடதாளந்தான் போடவேண்டும். கடவுள் காட்டுவார். வீட்டு வாரா சார்! தன் பவிஷையறிந்து நடக்க வேண்டாமா...

என்று ஏதேதோ கூறுவதை டாக்டரால் கேட்கவே முடியவில்லை. மாமனரின் போக்கும் மருமகனின் போக்கும் நன்ருகத் தெரிந்திருப்பதால் யாருக்காகவும் பதில் சொல்ல முடியாது தர்மசங்கடமாகி, நமக்கேன் இந்த வ்யவகாரம் என்று எண்ணியவராய் "சார்! நான் அவசரமாக மற்றொரு பேஷண்டைப் பாக்கப் போகவேண்டும். பார்த்துவிட்டு பத்து நிமிஷத்தில் மறுபடியும் வருகிறேன்." என்று கூறிவிட்டுச் சென்ருர். சுலோசனவின் மூடிய கண்கள் மூடியே இருந்தன.

## 9

மனப் புண்ணுடன் வீடுதிரும்பிய பிறகு நிலை தடுமாற்றத்துடன் தன் அறையில் வந்து தடாரென்று கட்டிலில் படுத்தான். அவனல் அவனுடைய உள்ளத்திற்குச் சமாதானம் கூறவே முடியவில்லை. தத்தளிக்கின்றது. பெருமூச்சு விடுகிருன். எப்படியிருந்தால் என்ன? ஏனென்று கேட்பார் உண்டா! அவனை அன்புடன் ஆதரிப்பவர்கள் மாமனும் மாமியும் தவிர வேறில்லை. அத்தகையவர்களுக்கு இந்த ஆபாஸ

விஷயம் தெரிந்தால் எப்படியிருக்கும்?... என்று நினைக்கும்போது அவன் மனது கொதித்தது.

தன்னை எத்தனை அலக்ஷியம் செய்து பலர் முன்னிலையில் அவமானப் படுத்தியபோதிலும் அவள் உடம்பு ஒன்றுமில்லாது சீக்கிரம் குணமாகி எழுந்திருக்க வேண்டுமே என்று மனது தவித்தது. "சுலோசனை வின் கலையார்வத்தை ஊட்டிவளர்ப்பதுபோல் நல்ல குணத்தையும் உலகத்தோடொத்து வாழும் உயரிய நியதியையும் கூட வளர்க்கக் கூடாதா!" என்று கடவுளை வேண்டினன். இரவு கடந்தது.

ஏதோ நடைச்சவம்போல் ஆபீஸுக்குச் சென்று வந்தானேயன்றி அங்கும் மனம் நிம்மதி கொள்ளவில்லை. மறுதினமும் டாக்டரிடமே அவள் தேகசுகத்தைப்பற்றி விசாரித்தறிந்தான். ஆனால் நேரில் மறுபடியும் போவதற்கு மனம் விரும்பவில்லை.

அன்றுமாலை வந்த பத்திரிகையை எடுத்துக்கொண்டு ரகுவின் சிநேகிதன் வந்து மிக்க அக்கரையுடன்... "ரகு... இதோ பார்த்தாயா! உன் மனைவிக்கும் உனக்கும் அடித்த யோகத்தை!" என்று கூறியவாறு அதிலுள்ள படத்தைக் காட்டினன்.

சுலோசனை கட்டிலில் படுத்திருக்கிருள். ஒரு நர்ஸ் ஐஸ்பையைத்தலையில் வைத்திருக்கிருள். கவர்னரின் மனைவி பக்கலில் ஒரு சோபாவில் அமர்ந்து சுலோசனையைஒருகையால் தடவியவாறு ஒரு கையால் அவள் கன்னத்தைப் பிடித்து வருடுகிருள். சுலோசனையின் பெற்றேரும் அருகிலிருக்கிருர்கள். சுதர்சனும் கட்டிலின் பக்கலில் நிற்கிருன்... இதை ஸ்னேப் படம் எடுத்து பெரிதாக டெவலப் செய்து பத்திரிகையில் போட்டிருந்தது கண்டு ரகு, ஒன்றுமே கூருது தன் மனைவியையே இமை இசைக்காமல் பார்த்தான்.

இம்மாதிரி ஒரு சந்தர்ப்பம் நேருவது அபூர்வத்திலும் அபூர்வமல்லவா! கவர்னரின் மனைவியே வீடேறி வருவதென்பது நம்பக்கூடிய விஷயமா! உன்மனைவியின் கலைத்திறனும் அவளுடைய ஒப்புயர்வற்ற அழகு மல்லவா இப்படிச் செய்கின்றன !...... என்று வந்த மனிதன் குறிப்பாய் பேசினன்.

ரகுவிற்குப் பதில் பேச முடியாது போனதால், மவுனமே சாதித்தான். வந்தவனும் கலைப்பித்தன். அவன் அதோடு விடாமல்... "ரகு... உனக்கு யோகம் பிறந்து விட்டதடா! இந்த கவர்னரின் மனைவி இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்தவளாம். இந்திய மக்களிடமும் இந்திய நாகரீகத்தினிடமும் அதிகப்பற்று கொண்டவளாம். இந்தியக் கலையில் முக்யமாய் பரத நாட்டியத்தில் அவளுக்கு அமோகமான ப்ரீதியாம். அவளுடைய தகப்பனர் இந்தியாவின் முக்ய உத்யோகஸ்தராய் இருந்தபோது இந்தியாவிலேயே இருந்து பிறகு இங்கிலாந்து சென்று அங்கு ஒரு கனவானை மணந்தாராம். அவர் கவர்னராகி வந்ததும் தானும்கூட வந்து விட்டார்களாம்.

ஆதியில் அவள் தகப்பனர் உத்யோகஸ்தராயிருந்தபோதே உன் மாமனருக்கும்அவருக்கும்உத்யோக விஷயமாய் சிறிது அறிமுகம் உண்டாம், அதைக்கூட லேடி கவர்னர் சொல்லி நினைப்பு மூட்டினளாம். அவள் தனது மகளின் கல்யாணத்திற்கு இவர்களையே ஜோடி நாட்டியமாடச் செய்யப் போவதாயும் உனக்கு பெரிய வேலை செய்து வைக்கப்போவதாயும் பலமான வதந்தி உலாவுகிறதப்பா! உனக்குத் தெரியாதா! நீ ஏன் இங்கு மொட்டைச்சிபோல் அழுதுகொண்டு படுத்

திருக்கிறாய் ?'' என்றான்.

ரகுவுக்கு ஒன்றுமே பிடிக்க வில்லையாதலால் அவன் ஏதோ சாக்கு போக்குச் சொல்லி அவனை யனுப்பிவிட்டு மறுபடியும் மவுனத் திலாழ்ந்தான். பத்திரிகையிலிருந்த படத்தை அப்படியே கத்தரித்துத் தன் பெட்டிக்குள் வைத்துக்கொண் டான். மன நிம்மதியின்றி புரண் டான். மறுதினம் அவனுடைய தள் ளாத மாமாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவருக்கு விஷயம் தெரிந் துதான் இதை எழுதியிருக்கிறாரோ'' என்று பயந்தவாறு அதைப் படித் தான்.

''சிரஞ்சீவி ரகுநாதனுக்கு ஆசீர் வாதம். உபயகுசலம்.

எத்தனை மவுனம் சாதிக்க எண்ணி யும் மனது கேட்கமாட்டேன் என் கிறது. உன் மனைவியின் விஷயத்தை முதலிலும் பிறகும் பத்ரிகையில் பார்த் துச் சங்கடமடைகிறேன். ஜோடி நாட்டியத்தை பகவான்தான் தடுத் தார் என்று சந்தோஷப்பட்டேன். எனினும் அவளுக்கு உடம்பு குண மில்லை என்பதைப் பார்க்க விசன மாகவிருக்கிறது. உன் மாமிக்கும் எனக்கும் உடனே ஓடிவந்துபார்க்க வேண்டுமென்று மனது துடிக்கி றது. வந்தால் உன் மாமியார் வீட் டில் எத்தகைய மரியாதைகள் நடக் கும் என்பதை அறிந்து வாளா விருக்கிறேன். நீ அவளருகில்தானி ருப்பாயென்று நம்பி இதை எழுது கிறேன். உடம்பைப்பற்றி அடிக்கடி கடிதமெழுது. வயது முதிர்ந்த காலத் தில் எங்களுக்கு எதிர்பார்த்த ஸந் தோஷத்தைக் கொடுக்க பகவான் இன்னமும் யோசிக்கிறான் போலும். எங்கள் கண் மூடுவதற்குள் ஒரு குழந்தையைப் பார்த்துவிட்டால் போதும். உன் தாயாரோ, தகப்ப னாரோ, வந்து பிறந்து குல விருத்தி யாக்கும் நன்னாள் எப்போது வரப் போகிறதென்று எதிர்பார்க்கிறேன். பகவான் கருணை எப்படியோ? அவ ளுக்கு உடம்பு சற்று குணமான தும் ஒரு பத்து தினங்களுக்கு இந்த க்ராமத்தில் இருந்து மருந்து சாப் பிட்டால் வெகு நன்றாகத்தேறிவிடும். ஆகையால் நீ எப்படியாவது சொல லிப் பார்த்து அழைத்துக்கொண்டு வா...உம்...இந்த ஆசை பகல் கனவு என்பது தெரிந்தும் அஞ்ஞா னம் கேட்காது எழுதுகிறேன். உன் உடம்பை ஜாக்ரதையாய்ப் பார்த் துக்கொள்ளு. உன்னை உன் மாமி பார்க்கவேண்டுமென்று ஆசைப் படுகிறாள். முடிந்தால் ஒரு வாரமா வது லீவு வாங்கிக்கொண்டு வந்து விட்டுப்போ...

உன் க்ஷேமத்தைக்கோரும்
மாமா''

இதைப் படித்த உடனே ரகு விற்கு எங்குமில்லாத துக்கம் பிறிக் கொண்டு வந்தது. வீட்டில்தான் ஏனென்று கேட்பாரில்லை. தாராள மாகத் தன் துயரம் தீரும் வரையில் மனத்தை அழுத்தும் பாரம் குறை யும் வரையில் அழுதான். அப்ப டியே புலம்பிப் புலம்பி எப்போது தூங்கினானோ! தெரியாது.

## 10

''ரகு! எங்காவது வெளியூர் ப்ர யாணமா என்ன! பெட்டி படுக்கை கள் தயாராகின்றன? என்ன விசே ஷம்?'' என்று கேட்டுக்கொண்டே அவன் சிநேகிதன் கேசவன் வந் தான். ரகு தன் மனக்கொதிப்பில் பழயபடிபோல் பதில் சொல்லமாட் டாது ஏதோ ஒருவாறு ''ஆம்...ஒரு வாரம் லீவு கிடைத்தது. என் மாமிக்கு உடம்பு சரியில்லையாம். ஊருக்குப் போகிறேன். என்ன சமாச்சாரம். எங்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

கேச:—அட......இதென்னப்பா கேள்வி. எங்கு வந்தேனு! உன்னுடன் சற்று தமாஷாகப் பேசலாமென்றுதான் வந்தேன். நீ பேசுவதும் கேட்பதும் விநோதமாயிருக்கிறதே...சரி. நான் போய்வருகிறேன்—என்று கிளம்பினன்.

அப்போதுதான் ரகுவுக்கு, தான் வித்யாஸமாய் நடந்தது மனத்தில் உறுத்தியது. தன்னையே சமாளித்துக்கொண்டு "கோபிக்காதேப்பா! ஏதோ எனக்கு மனதும் சரியில்லே, உடம்பும் சரியில்லே. அதனல் சொல்லிவிட்டேன். சரி...உனக்குத்தான் லீவு விட்டாயிற்றே! நீயும் எங்க மாமாவின் க்ராமத்திற்கு வருகிருயா! ஒரு வாரம் தமாஷாக இருந்துவிட்டு வரலாம். எனக்கும் பொழுதுபோக்காக இருக்கும் என்று கூப்பிட்டான்.

கேசவனுக்கும் அது உசிதமென்று தோன்றியதால் "சரி! வீட்டிற்குப்போய் என் பெற்றேர்களை உத்திரவு கேட்டுக்கொண்டு வருகிறேன். நான் வருவதாயின் நேரில் ஸ்டேஷனில் சந்திக்கிறேன்...ஆமாம் உன் மனைவிக்கு உடம்பு சரியில்லே யாமே! இப்போது தேவலேயா! அந்த நாட்டிய அரசன் சதா அவ்விடத்திலேயே இருக்கிருனமே! என் பிதா நேற்று போயிருந்தாராம். அவர் கண்ணுல் பார்த்தாராம். உன் மனைவிக்கு உடம்பு முற்றிலும் குணமாகிய பிறகு அந்த நாட்டியக்காரனின் ஊருக்கு எல்லோரும் போயிருந்துவிட்டு வரப்போகிருர்களாம். ஊர் மிக வசதியானதாம். நல்ல காற்றும் ஆரோக்யமான ஜலமும் எங்கு பார்த்தாலும் தோப்பும் துறவும், குளமும், ஊர் மிகவும் நன்றுயிருக்குமாம். உன் மாமனர்கூட ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டு போகிருராம். உனக்குத் தெரியாதா?" என்றுன்.

ரகுவுக்கு இன்ன பதில் சொல்வதென்று தோன்றுமல் திகைத்தான். குட்டை விட்டுக்கொடுக்காமல் "ஆமாம். தெரியும்...ஆரோக்யத்திற்கு ஊர் மாற்றுவது அவச்யந்தானே...சரி...நீ வீட்டிற்குப் போய் விட்டுவா...என்று அவனை வலுவில் தானகவே அனுப்பிவிட்டான்.

அவன் எத்தனைக்கெத்தனை மனைவியைப்பற்றி நினைக்காமலிருக்க முயன்றும் அவனுடைய ஆசையும் அஞ்ஞானமும் கேட்காமல் எப்படியாவது மறுபடியும் ஒருதரம் பார்த்துவிட்டு வரலாமா! என்று மனது பதைத்தது. உடனே அன்று நடந்த அலக்ஷியத்தை எண்ணி வெகு ப்ரயாஸைப்பட்டு மனத்தையடக்கிக்கொண்டான்.

தனக்கு ஒரு வாரம் லீவு வேண்டுமென்று கடிதம் எழுதி ஆபீஸுக்கு அனுப்பிவிட்டுத் தான் தைரியமாய் ஊருக்குப் புறப்பட்டது அவனுக்கு வியப்பாகவே தோன்றவில்லே. லீவு கிடைத்தால் கிடைக்கட்டும். அன்றி வேலே போனலும் போகட்டும். இனி எதைப்பற்றியும் அவசியமில்லே என்கிற அதீதமான எண்ணமே உண்டாகியது.

ரயிலுக்குப்போகும்வழியில் டாக்டரிடம்சென்று விசாரித்தான். அவர் இவனுக்கு அனுதாபப்பட்டு "என்ன சொல்வது சார்! பார்த்தால் டைபாயிடாயிருக்குமென்றுதான் தீர்மானிக்கப்படுகிறது. காக்காய் ஏறியதும் பனம்பழம்விழுந்ததும் சரியாகிவிட்டது. இது முதல்வாரக் கடைசி. இரண்டாவது வாரம் இன்னும் கடுமையாகத்தானிருக்கும். பயமொன்றுமில்லே. ஏன்? மறுபடியும் பார்க்கவேண்டுமோ!...சார்!...நீங்கள் விரும்புவது சகஜந்தான். ஆனல் அதனல் லாபமொன்றுமில்லே என்

பது எனக்குத்தெரியும். அவள் மனம் மின்னும் அதிர்ச்சியடைந்தால் ஜுரம் ஏறுமேயன்றி இறங்காது. ஆகையால் சற்றுபொறுமையுடனிருங்கள். அவ்வப்போது நான் விஷயத்தைத் தெரிவிக்கின்றேன்'' என்றார்.

ரகுவினால் அதற்குமேல் ஒன்றும் பதில்சொல்ல முடியவில்லை. "நல்லது நான் வருகிறேன். நான் ஒரு வாரம் லீவில் ஊருக்குப் போகிறேன். ஏதாவது விஷயமிருந்தால் இந்த விலாஸத்திற்குத் தெரிவித்தால் மெத்த சந்தோஷமாயிருக்கும்'' என்று விலாசச் சீட்டைக்கொடுத்துவிட்டு விடைபெற்றுச் சென்றான்.

ஆனால் டைபாயிடா! என்று நினைக்கும்போது அவனை ஒரு குலுக்கு குலுக்கி வேதனைச்சுழலில் வாட்டி "என் அருமைத் தாயாரை இந்தப் பாழும் ஜுரமாகிய எமன்தானே வாயில் போட்டுக்கொண்டது. அதைப்போல் என் சுலோசனாவையும் விழுங்கி என்னைப் பேராபத்தில் விட்டு அபாரமான பழிச்சொல்லைத் தாங்கும் சுமை தாங்கியைப் போல் செய்துவிடுமோ! என் தேகம் நடுங்குகின்றதே... என் செய்வேன்? ஊருக்குப்போவதை நிறுத்திவிடலாமா!... என்று திடீரென்று மனது மாறிக் குழம்பியது.

கைக்கடிகாரத்தைப் பார்த்ததில் இன்னும் ஒரு மணி காலத்திற்கு மேல் ரயில் கிளம்ப அவகாசமிருந்ததால் என்ன செய்வதென்று சில வினாடிகள் தத்தளித்தான். 'என்னவானாலும் ஆகட்டும். சுலோசனாவை மற்றொருமுறை போய் பார்த்துவிட்டே போகிறேன்' என்று முடிவு செய்துகொண்டு வண்டியை சுலோசனாவின் பங்களாவுக்கு விடச் சொன்னான். வண்டியில் அவன் ஆடுவதுபோல் அவனுடைய மனமும் ஆடிச் சிதறித் தவித்தது.

## 11

சுலோசனாவைச்சேர்ந்த உறவினர்கள், சிநேகிதர்கள் எல்லோருக்கும் தந்தியடித்து வரவழைத்திருப்பதை அறிந்த ரகுவுக்கு இதயம் அப்படியே நின்றுவிடும்போலாகிவிட்டது. "உள்ளூரிலிருக்கும் கணவனுக்கு ஒரு வார்த்தைசொல்லியனுப்ப வழியில்லாதுபோயிற்று. வெளியூர்க்காரர்களுக்குத் தந்தி கொடுத்து வரவழைத்திருப்பதா... என்ன வஞ்சனை! என்ன அலக்ஷியம்! என்னைவிட அவர்கள்தானே அதிக மதிப்பாகிவிட்டது!'' என்று மனம் உடைந்தது.

ஒருவரையும் கேட்காமல் தடதடவென்று மாடிக்குச்சென்றான். நல்லவேளையாக அவளுடைய பிதா வெளியில்போயிருந்தார். நர்ஸ் தான் ஒருத்தி ஐஸ் வைத்துக்கொண்டிருந்தாள். சுலோசனாவின் தாயார் வாடி வதங்கிய முகத்துடன் உட்கார்ந்திருந்தாள்.

என்ன சொல்வார்களோ! என்கிற திகிலும் பயமும் நடுங்கியவாறே சுலோசனாவின் அருகில் சென்று குனிந்து அவள் முகத்தைப் பார்த்தபடியே "சுலோசனா! எப்படி இருக்கிறது உடம்பு... இதோபாரு'' என்று கேட்கும்போது குரல் கம்மி தழதழத்துக் கண்ணீர் சுறந்தது.

சுலோசனா பதிலே பேசவில்லை. கண்ணையும் திறக்கவில்லை. அவள் தாயார் மருமகப்பிள்ளையைக் கண்டதும் சடக்கென்றெழுந்து வெளியே சென்றாள். அடுத்த வினாடியே சுலோசனாவின் மூத்த அண்ணன் உள்ளே நுழைந்து ரகுவை இரு கைகளையும் பிடித்து வெளியே அழைத்துப்போனபடியே, "இன்னும் ப்ராணன் இருக்கிறது... போன பிறகு கொள்ளிபோட்டுக்

கொளுத்த வரலாம். இப்போது வேலை யொன்றுமில்லை. போகலாம்.'' என்று கூறி வீதிவரையில் கொண்டு விட்டான்.

என்னே அனியாயம்! ரகுவின் நிலைமை எப்படித்தானிருக்கும் என்பதை ஊகித்தறிதல் நலமே யன்றி எழுதிமுடியாது. என்ன வானாலும் ஆகட்டும் என்று அவன் கன்னத்தில் இரண்டு அறை விட்டு விடலாமா! என்று முதலில் நினைத்தான். ஏற்கெனவே கொந்தளிக்கும் மனப்புயல் ஆயிரம்மடங்காகப் பெருகியது.

சற்றும் தாக்ஷிண்யம் பாராமலும் பயப்படாமலும் மைத்துனன் கன்னத்திலும் முதுகிலும் படார் படார் என்று அறைந்து "திமிர்பிடித்த தடிக்கழுதை! என்னையா நீ கழுத்தைப்பிடித்து இழுத்துத்தள்ளத்துணிந்தாய்? கடுகு சிறுத்தாலும் காரம் குறையாதடா! குறையாது. என் மனைவியை நான் வந்து பார்க்க நீ யாரடா தடை செய்வதற்கு?'' என்று வெகுவிறைப்பாகக்கூறிவிட்டு, மறுபடியும் மாடிக்கு ஓட எத்தனிக்கையில் வாசலில் கார் வரும் ஹாரனைக் கேட்டு தன் மாமனார் வந்துவிட்டார் என்பதையறிந்து, இன்னும் விபரீதமான ரஸாபாஸம் நடந்துவிடும் என்று உணர்ந்து சடக்கென்று வெளியே போய்விட்டான்.

இமை இசைக்கும் நேரத்தில் சகலமும் நடந்துவிட்டதாலும் பதிலுக்கு அவனை அடிப்பதற்குள் ஒரே ஓட்டமாக ஓடிமறைந்ததாலும் தன் தகப்பனர் வந்ததும் ப்ரமாதமாகப் புலம்பிக்கொண்டு நடந்ததைக் கூறினன். இரண்யனுக்கு வந்த கோபத்தைவிட அதிகமாக அவருக்கு வந்ததால் வண்டியைத் துரத்திக்கொண்டு ஓட எத்தனிக்கும்போது தனக்குத் தெரிந்த பெரிய மனிதர் அதேக்ஷணத்தில் காருடன் வந்து வீதியில் நின்றதால் அவமானத்தை உத்தேசித்து வாளாவிருந்தார்.

வந்தவர் சாமான்யப்பட்டவரல்ல. அதோடு தனது பிள்ளைக்கே பெண் கொடுப்பதாகக் கல்யாணப் பேச்சு வேறு நடந்துகொண்டிருப்பதால் இச்சமயம் ரஸாபாஸமான விஷயம் அவர்காதில் விழக்கூடாது என்றும், தாம் பெண்கொடுக்கப் போகும் கல்யாணப்பிள்ளையே அடி வாங்கினன் என்பதையறிந்தால் மனது சலித்தாலும் சலிக்கலாம், தன் கௌரவத்திற்கு ஹானி வந்தாலும் வரும்; என்று பலவிதமான யோசனைகளால் குழம்பிப்போய் மகனைச் சமாதானப்படுத்தி உள்ளே அனுப்பிவிட்டு வந்தவர்களை விசாரிக்கப் போனர்.

மேலுக்கு வாய், உபசாரமாகப் பேசுகிறதே யன்றி உள்ளுக்குள் வயிறு எரிகிறது. ரகுவைப்பிடித்து அப்படியே கொன்றுவிடலாமா என்றுகூட ஆத்திரம் பொங்குகிறது. இந்தசதிசெய்ததற்கு அவனை எப்படிப் பழிவாங்கலாம் என்கிற யோசனையிலேயே தகப்பனும் மகனும் ஆழ்ந்துவிட்டார்கள்.

## 12

நேரே ரயில்வே ஸ்டேஷனையடைந்த ரகு உடைந்த மனதுடன் எந்திரம்போல் டிக்கட்டைவாங்கிக்கொண்டு வண்டியிலேறி உட்கார்ந்தான். கூட்டம் சொல்லமுடியாது. நெருக்கியடித்துக்கொண்டு மேலே மேலே ஏறுகிறர்களே யன்றி குறையும் வழியே இல்லை. ஒரு மூலையாய் ரகு தன் சாமான்களுடன் ஒண்டிக்கொண்டு உட்கார்ந்தான்.

தான் வரச்சொல்லியிருந்த சிநேகிதன் வந்தானு, இல்லையா என்

பதைக்கூட கவனிக்க மறந்துவிட்டான். வண்டியும் புறப்பட்டது. ரகுவுக்கெதிர்சாரியில் உட்கார்ந்திருந்த பெண்ணுக்கு சுமார் 22 வயதிருக்கும். அவள் தேம்பித் தேம்பி அழுது முகமே வீங்கிவிட்டது. "ஐயோ பாவம்! யார் இறந்துவிட்டார்களோ இப்படி அழுகிருள்!" என்று ரகு கவனிக்காததுபோல் அவளேயே கவனித்து வந்தான்.

அவள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் 30 வயதுடைய ஒருவன், அப்பெண்ணின் கண்களைத் தானே துடைத்து..."சின்னம்மா! எத்தனே சொன்னலும் கேட்காமல் இப்படிப் புலம்பினல் என் மனது கலங்கிவிடாதா! எனக்குமட்டும் உன்னைப் பிரிந்திருக்க முடியும் என்று நினைக்கிருய்? ஏதோ காலவிதி இத்தகைய ஆர்டர் வந்துவிட்டது. நான் போய் வெகு சீக்கிரத்திலேயே மறுபடியும் வந்துவிடுகிறேன். தைரியமாய் என்னையனுப்பமாட்டாயா!" என்று கெஞ்சும் குரலில் கூறினன்.

அந்தப்பெண் விக்கிக்கொண்டே "நானும் எவ்வளவோ ப்ரயாஸைப் பட்டுதான் பார்க்கிறேன். என்னல் முடியவில்லேயே! இந்த வேலே போனல் போகிறது என்று விட்டு விடுங்களேன். பணமா ப்ரதானம்? சுவரிருந்தால்தானே சித்திரம் எழுதலாம். பட்டாளத்திலே போனவர் திரும்பியே வருவதில்லே என்றல்லவா சிலர் கூறுகிருர்கள். நாம் இருவரும் கூலிவேலே செய்தாவது பிழைக்கலாமே...

இப்போது ரகுவுக்கு நன்ருகப் புரிந்துவிட்டது. அடாடா! அவன் அடைந்த வியப்புக்கு அளவே கூற முடியாது. கணவனேப் பிரிய மனம் வராது கண் கலங்கும் உத்தமப் பெண்ணேப் பார்க்கப் பார்க்க அவன் கண்களுக்கு அவள் ஓர் பெண்தெய்வமாகவே தோன்றியது. "என்ன அன்பு! என்ன ஒற்றுமை! எவ்வளவு ப்ரேமை...உம்.."என்று ஒரு பெருமூச்சு விட்டான். அவன் எண்ணங்கள் எப்படி எப்படியோ பாய்ந்து சிதறின. மீண்டும் அவர்களேயே கவனிக்கவாரம்பித்தான்.

கணவன்:—சின்னம்மா! உன்னுடைய அன்பின் வேகத்தை நான் அறிவேன். நமக்குள்ள கடன் தொல்லேயையும் நீ அறிவாய். சர்க்காரே என்னே மாற்றி அதிக சம்பளமும் போட்டிருக்கும் சந்தர்ப்பத்தை நான் இழந்துவிட்டால் கடனே யடைப்பதெப்படி? சந்தோஷமாக வாழ்க்கை நடப்பதெப்படி? இதற்கெல்லாம் மனதைத் தளரவிட்டுவிட்டால் என்ன செய்வது?

நான் என்ன பட்டாளத்தில் சண்டைபோடும் இடத்திற்கா போகிறேன்? பட்டாளத்திலுள்ள ஆபீஸில் வேலேயாகப் போகிறேனேயன்றி சண்டைக்குப் போனல்தான் ஆபத்தும் பயமும் உண்டு. சில வருஷங்களுக்கு முன்பு சர்வ சாதாரணமான நிலேமையிலிருந்த எத்தனேயோ பேர்கள் இந்த மில்ட்ரி உத்யோகத்தின் மூலம் லக்ஷாதிபதிகளாகிவிட்டதை நாம் கண்ணுரப் பார்க்கவில்லேயா? அப்படி நமக்கும் நல்ல காலம் வந்தால் நாமும் நன்ருகவிருக்கலாமல்லவா...

சின்ன:—சரிதான்! நன்ருகச் சொன்னீர்கள். லக்ஷாதிபதிகளாக சரியான மார்க்கத்தில் ஆனவர்களாயின் ஆபத்தில்லே. முக்காலே மூணு வீசமும் கோணவழியில் சென்று கோடீச்வரர்களாகி உடனே சிக்ஷாதிபதிகளாயும் ஆகி சிறையில் ஜபம் செய்கிறவர்களேப் பார்க்கவில்லேயா? முதலில் எத்தனே நல்லவர்களாகவிருப்பினும் பணம் மகா கொடியது. அந்த ஆசை வந்து

விட்டால் பணம் சேர்ப்பதில் நாட்டமேயன்றி கண்ணியம், கவுரவம், குலப்பெருமை, பெற்றோர்களின் மேன்மை சகலமும் நாசமாகிவிடுகின்றன. அந்தமாதிரி ஒன்றுமில்லாதிருக்க வேண்டுமே என்றுதான் நான் பயப்படுகிறேன். இன்றுள்ள நிலைமையே நமக்குப் போதும். பணத்தாசை பிடித்து மானங்கெட்டு வாழவே வேண்டாம். வைர நகைகளும், தங்க நகைகளும் உடம்பில் மின்னமின்ன மனிதனுக்குள்ள உண்மையான மதிப்பு, நாணயம், கீர்த்தி, குலப்பெருமை முதலியன மழுங்கிப் போய்விடவேண்டாம்...

கண:—சின்னம்மா! அந்தமாதிரி ஊரான் வயிற்றிலடித்து நம் உடலை கொழுக்கச் செய்யும் அல்ப புத்தியுடைய மனிதன் என்றா என்னை எண்ணுகிறாய்! இத்தனை காலம் பழகியும் என்னைப்பற்றி நீ அறியவில்லை என்றுதான் தோன்றுகிறது. உயிரே போனாலும் சரி. நான் லஞ்சம் வாங்கவோ, கண்ட்ராக்டர்களை கைவசம் செய்துகொண்டு கொள்ளையடிக்கவோ, கவர்ன்மெண்டு கணக்குகளில் தப்புகணக்கு வரவு செலவுஎழுதி அவர்களையே ஏமாற்றி ஏப்பம்விடவோ, பாவம்! உயிரையும் விடத்துணிந்து பட்டாளத்தில் சேர்ந்துள்ள நமது சிப்பாய்களுக்காகக் கொடுத்துள்ள சாமான்களை பாதிக்குமேல் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு அந்த த்யாகமூர்த்திகளின் வயிற்றிலடித்து அவர்களைப் பட்டினியால் சாகவடித்துக் கொலைபாதகம் செய்யும் அனியாயம் செய்யவோ நான் கனவிலும் நினைக்கமாட்டேன். இது உன் தலைமேலடித்து சத்தியமாகச் சொல்லும் வார்த்தையாகும்.

எனக்குக் கொடுத்துள்ள வேலையில் கண்ணுங் கருத்துமாக உழைத்து நாணயமான முறையில், நல்ல மனுஷ்யன் என்று நாலுபேர் கூறும்படியான முறையில் நான் திரும்பிவருகிறேன். சத்தியமான வழியில் பகவான் கொடுத்தது போதும். ஊரார் உடைமைக்கு நான் பேயாய் பறக்கவில்லை. என் வார்த்தையை நம்பு சின்னம்மா! ஏதடா இது, அவன் கொள்ளையடித்துக் குபேரனாகி ஜெயிலுக்குப்போனான். இவன் இப்படிச் செய்தான் என்று உலகத்தில் பலபேர் பலவிதமாகக் கூறுகிறார்களே, நம்ம கணவன் கூட அப்படி ஏதாவது திருடியோ, மோசம் செய்தோ ஜெயிலுக்குப் போய்விட்டால் என்னசெய்வது...என் கணவன் சிறையிலிருக்கிறான் என்று கூற வெட்கப்பட்டுக்கொண்டு, உத்யோகத்தில் தடபுடலாக இருக்கிறான். என்று நாமும் புளுகி ஊரை ஏமாற்றவேண்டிவருமோ! என்று கவலைப்படுகிறாயா? அம்மாதிரியான சங்கடம் உனக்கு சற்றும் வேண்டாம். என்னிடம் நீ தேவதா விச்வாஸம் வைத்திருப்பது உண்மையாயின் என் வார்த்தையை நம்பு. நான் மானத்திற்கும், நான்கு பேர் மதித்து என்றைக்கும் என்னை ஒரு மனிதனாக கௌரவிப்பதற்கும் ஆசைப்படுகிறேனே யன்றி பணத்திற்குமட்டும் ஆசைகொண்டு மதிப்பற்றகட்டையாய் நாலுபேர் சிரிக்கும்படி வாழக் கனவிலும் விரும்பமாட்டேன். அழாதே சின்னம்மா...

சின்:—சத்தியமாகச் சொல்லுகிறேன். உங்களைப்பிரிந்திருக்க வேண்டுமே என்கிற கவலை எவ்வளவு உச்சத்தில் என்னை வாட்டுகிறதோ, அத்தனை உச்சத்தில் நல்ல பெயருடன் நல்ல மதிப்புடன் நீங்கள் திரும்பி வரவேண்டுமே என்ற விசனம் பாதிக்கிறது. ஆண்டவன்

தான் அருள் புரியவேண்டும்.

தம்பதிகளின் உயர்ந்த மனோ பாவமும், நாணயத்திலும் நன்மதிப்பிலும் உள்ள நோக்கமும் கண்டு ரகுவின் உள்ளம் பூரித்தது. "உம். நீ எக்கேடுகெட்டாவது போ. பணம் பணம்...பணந்தான் ப்ரதானம். அதை ஏராளமாகக் கொள்ளையடித்தோ, வயிற்றிலடித்தோ கொண்டு கொட்டிவிடு. நான் வைர செட்டு நகைகளுடனும் தினுசு தினுசாய் சரிகைப்புடவைகளுடனும் ஆனந்தமாகக் காக்ஷியளிக்கின்றேன்" என்று சொல்லி வளையவரும் சில உத்தம மனைவிகளைப்போலில்லாமல் மானம்போய் வாழாமை முன்னினிதே என்கிற உயர்ந்த லக்ஷியத்தில் கண்ணுங்கருத்துமாயுள்ள மனைவியைப் படைத்துள்ள இந்த மனிதன் பரமபாக்கியசாலி. மகா அதிர்ஷ்டக்காரன்" என்று தனக்குள் எண்ணமிட்டவண்ணம் உட்கார்ந்திருக்கிறானேயன்றி அவன் மனத்தில் போராடும் எண்ணங்களுக்கு அவனால் பதில் சொல்லவே முடியவில்லை.

அதே வண்டியில் அடுத்த பெஞ்சியில் ஒரு தகப்பனும் பெண்ணும் சண்டையிடுவதும் காதில் விழாமலில்லை. "எனக்கு என் கணவருடன் இருப்பதுதான் சந்தோஷம். என்னை ஏன் அடிக்கடி வந்து அழைத்துக்கொண்டுபோய் இம்சை செய்கிறீர்கள்? அவரை ஓட்டலில் சாப்பிடவிட்டுவிட்டு நான் தாயார் வீட்டில் சீராடுவது எனக்குப் பிடிக்கவே இல்லையப்பா...இந்த தரம் ஒரேவாரம்தான் இருப்பேன். பிறகு திரும்பி விடுவேன். ஓட்டல் சாப்பாடு அவருக்குப் பிடிப்பதே இல்லை. சமயமறிந்து அவருக்கு நான் எப்படி எப்படியோ பணிவிடைகள் செய்வேன். நான் இல்லாத நாட்களை அவர் நரகத்திற்கு ஒப்பாக நினைக்கிறார். அது எனக்குத்தானே பாவம்! பெண்களை ஒருவனிடம் கட்டிக்கொடுத்தபிறகு தினம் அழைத்துச் சீராட்டுவது என்கிற துர்க்குணத்தைப்பெற்றவர்கள் விட்டுவிடவேண்டும். ஏதோ சமயா சமயத்தில் வருவதைமட்டும் ஆதரிக்கவேண்டும். அவர் மனதும் கெட்டு உடம்பும் கெட்டுவிட்டால் அதன் பலன் உங்களைத்தானப்பா சேரும்...

தகப்பனார் இடைமறுத்து...... "அம்மா! ஏதோ பெத்தமனம் கேளாது வந்துவிட்டேன். இனிமேல் நீயாக வரும்போது நான் அழைத்துப் போகிறேன். கோபிக்காதே. கணவனின் நிழல்போன்று மனைவி இருப்பதுதான் நியாயம் என்பதை அறிந்தும் புத்தி கெட்டுவிடுகிறது" என்றார்...

இப்படிப்பட்ட உத்தமப் பெண்களும் உலகில் இருக்கிறார்களா! அடடா! மாதத்தில் உள்ள 30 தினங்களில் 25 என் சுலோசனா பிறந்தகத்திலிருப்பதையே வேண்டுகிறாளே... இந்தப் பெண்ணின் அன்பிலும் அறிவிலும் ஒரு திவலையாவது என் சுலோசனாவுக்கு கொடுக்கக் கூடாதா?" என்று வருந்தினான்.

"வண்டி முற்றிலும் கவனித்துக் கொண்டுபோனால் எத்தனையோ விநோதங்கள் எத்தனையோ அபூர்வக் காக்ஷிகள் கிடைத்துக் கொண்டே இருக்கும். வாழ்க்கையும் ஒரு வண்டியைப் போன்றது தானே!" என்று எண்ணமிட்டவண்ணம் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான். பொழுது போனால்தானே! அது வளர்வதாகவே தோன்றியது.



## 13

"என்னப்பா! வந்தயாடாம்மா... உன் உடம்பு ஏன் இப்படி இளைத்திருக்கிறது? பார்க்கமுடியவில்லையே ...முதலில் பல்லைத் தேய்த்துவிட்டு காப்பி சாப்பிட வாடாப்பா... சுலோசனாவுக்கு எப்படி இருக்கிறது?'' என்று மாமாவும் மாமியும் அன்பொழுகக் கேட்டார்கள்.

சிறிய பையன்போல் அவர்களைப் பார்த்த உடனே ரகுவிற்கு எதனாலோ துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்து தேம்பித் தேம்பி அழுதுவிட்டான். இவன் அழுவதைக் கண்டு காரணமில்லாமல் கிழவர்களும் மூக்கைச் சிந்தியவாறு "ஏண்டாப்பா சுலோசனாவுக்கு சவுக்கியந்தானேடா! உடம்பு தேவலையா!'' என்று மறுபடியும் கேட்டார்கள்.

எப்போதும் உலகத்தில் அன்பான மனிதர்களைப் பார்த்தவுடனே தானாக சந்தோஷமும் ஆனந்தமும் தலைக்கேறி கண் வழியாய்ப் பொங்கிவிடும். இது இயல்பான அனுபவமாகும். ஏற்கெனவே அன்புக்கு ஆவலாய் எதிர்பார்க்கும் இதயமாகிவிட்டதால் இந்த பழங் கிழங்களின் விலையிலாத ப்ரேமையை... ஆசைப்ரவாகத்தைக்.....கண்டதும் அவன் மனம் உருகி, மாமியார் வீட்-

டிலடைந்த அவமானத்திற்கும் மனைவியின் வெறுப்பிற்கும் நொந்துபோயிருந்ததால் அவனாலேயே சமாளிக்க முடியாது போயிற்று.

பச்சைக் குழந்தையைப்போல் முதலிலிருந்து சகல விஷயங்களையும் மூச்சுவிடாமல் சொன்னபிறகு தான் அவன் நெஞ்சை யழுத்திய பாரம் சிறிது குறைந்ததாகத் தோன்றியது. வியப்பும் மனஅதிர்ச்சியும் அடைந்த கிழவர்கள்......என்ன ! உன்னை வெளியில் இழுத்துக் கொண்டு தள்ளினை...உன்னையா ...உன் மனைவியை நீ பார்ப்பதற்கும்...உன் மனைவிக்கு உன்னைவிட அவர்கள்தான் சொந்தமா...என்ன அக்ரமம்....உம்....சம அந்தஸ்தில்லாது செய்யும் காரியம் இப்படி அனேக இடங்களில் நடக்கின்றது. நாங்கள் பண்ண பாவம். இந்த சிறிய வயதில் எத்தனையோ ஆனந்தமாய் வாழ்க்கை நடத்தவேண்டிய நீ இப்படிக் கண்கலங்க, அதைப் பார்க்கும் விதி எங்களுக்கு அமைந்தது'' என்று கண்ணீர் விட்டார்கள்.

ரகுவை அவன் மாமியே தாய் போல் வளர்த்துவிட்டதால் தாயும் மகனும்போல் இருப்பார்களே யன்றி அன்னியர்போலிருக்கவே மாட்டார்கள். அவன் காப்பியைக் குடித்துவிட்டு அவன் மாமியின் மடியில் தலையை வைத்துக்கொண்டு படுத்தான். அதில் அவனுக்கோர் தனித்த ஆனந்தம். "மாமீ! உன் கையால் எனக்கு முறுக்கு சுற்றிக் கொடு....எத்தனையோ வருஷமாகி விட்டது போலிருக்கிறது நீ செய்ததைச் சாப்பிட்டு...

"அட என் ராஜா! உனக்கு மிகவும் ப்ரியமாயிற்றே! என்று தெரிந்து தான் முறுக்கு, நெல்பொறி உருண்டை இரண்டும் செய்து வைத்திருக்கிறேன். ஒருவேளை வந்தாலும் வரலாம். அப்படி வரவில்லை என்றால் நம் சேஷன் நாளை ஊருக்குப் போவதாயிருக்கிறன். அவனிடம் உனக்கு கொடுத்தனுப்பத்தான் செய்து வைத்தேன். நல்லவேளையாக நீயே வந்து விட்டாய்.

இம்முறை உனக்கு வெகு நன்ருக பொழுதுபோகும் என்று நினைக்கிறேன். என் தங்கை காமுவுக்கு உடம்பு சரியில்லாது மிகவும் கிடந்தாள். அவளையும் குழந்தைகளையும் 1 மாதத்திற்கு இங்கு வந்து மருந்து சாப்பிட்டுவிட்டுப் போகும்படி கடிதம் எழுதினேன். நாளை வருவதாகப் பதில் வந்திருக்கிறது.'' என்ருள்.

சுலோசனவின் உடம்பு எப்படியிருக்கிறதோ! என்கிற கவலையே ரகுவை வாட்டிக்கொண்டிருந்தது. அன்று செல்ல மறுதினம் காலையிலேயே காமுவும் அவளுடையபெண்ணும் பிள்ளையும் கைக்குழந்தையும் வந்து சேர்ந்தார்கள். காமுவின் பிள்ளைக்கு 18 வயதிருக்கும். அவன் வெகு சிறு வயதிலேயே அதிக புத்திசாலியாய்ப் படித்து பி. ஏ. பாஸ் செய்தான். இப்போது லீவாகையால் தாயாருடன் வந்தான். ரகுவுக்கு அவனுடன் விளையாடுவதிலும் கைக்குழந்தையுடன் குலாவுவதிலும் பொழுது என்னவோ நன்ருகத்தான் போகிறது. ஆனல் மனத்திற்குள் செய்யும் வேதனையைமட்டும் அவனல் அடக்கவேமுடியவில்லை.

காமுவின் பெண் கமலா சாதாரண அழகிதான். S. S. L. C. பாஸ் செய்ததும், அதோடு நிறுத்திவிட்டு பலவீனமாயுள்ள தன் தாயாருக்கு மிகவும் ஒத்தாசையாயிருக்கிறள். சங்கீதம் வெகு நன்ருகப் பாடுவாள். ஏழைக் குடும்பமாகையால் அதிக பணம் செலவிட்டுப் பாட்டு கற்றுக் கொடுக்க சக்தி இல்லை; எனினும் பாடும் அழகைக் கண்டு அவர்கள்

ஊரில் உள்ள ஒரு தாசி மிகச்சிறந்த பாடகியாயிருக்தும் இவளுக்கு இறைமாகச் சொல்லிக் கொடுத்ததால் கமலாவின் சங்கீதம் அபூர்வமாகி விட்டது. இவளது பாட்டுக்காகப் பல சினிமாக்காரர்கள் கண்வைத்தும் இவளுடைய தாய் தந்தையர் அவர்களை வீட்டுப்பக்கம் கால் வைக்கவிடமாட்டேன் என்று கூறி விட்டார்கள். கமலாவைப் பாடச் செய்து ரகு ஆனந்தமாகக்கேட்பான். தனக்கு உடன்பிறந்த தங்கை யாகவே அவளை எண்ணி மிக்க அன்புடன் பழகிவந்தான்.

அன்று சாயங்காலம் கமலா பாடும்போது "சொல்லவல்லாயோ! கிளியே" என்கிற பாட்டை அதி அற்புதமாய் ராகமாலிகைபோல் இசைத்துப் பாடுவதைக் கேட்டதும் ரகுவை அவனையறியாது தூக்கி வாரிப்போட்டுக் கலக்கியதோடு தன் மனைவி கடைசியாக இதே பாட்டைப் பாடி அபிநயம் செய்ததும், அன்று விஷக்கடி வேளைபோல் மனஸ்தாபம்வந்ததும், அதே வியாஜமாக அவள் படுத்துவிட்டதும், தனக்கு நேர்ந்த அவமானத்தின் பயங்கரமும் அவன் மனக் கண் முன்பு தோன்றி உடம்பே ஒரு நடுக்கல் நடுக்கச் செய்ததும் கண்களை இறுக்கி மூடிக்கொண்டு அப்படியே குப்புறப் படுத்தான்.

இப்பாட்டு வெகு நேர்த்தியாயிருப்பதால் அந்த ஆனந்தத்தில் மெய் மறந்து படுத்திருப்பதாக மற்றவர் நினைத்தார்கள். அவன் இதயத்தின் புண்ணை பிறர் எப்படி அறியமுடியும்? "கடவுளே! எது எப்படியானாலும் என் சுலோசனாவின் உடம்பு குணமாகிவிடவேண்டும். இந்த ஒரு கருணையாவது நீ செய்தால் போதும்" என்று அவன் உள்ளம் மன்றாடி இறைஞ்சியது.

## 14

ஒரு வார லீவும் எப்படியோ கழிந்துவிட்டது. ஆனால் டாக்டரிடமிருந்து எவ்வித தகவலும் இல்லாதிருந்ததால் உடம்பு குணமாகிக் கொண்டு வருவதாகவே எண்ணினான். ஊருக்குப் போகவேண்டிய நாள் நெருங்கியது. இக்குழந்தையுடனும் மாமன், மாமியுடனும் அன்பாயிருந்துவிட்டு இன்று திடீரென்று பிரியவேண்டுமே என்கிற விசனம் இத்தனை நாளாய்விட இப்போது தான் அதிகமாகப் பாதித்தது.

கிழவருக்கும் கிழவிக்கும் வயது அதிகமாகி வருவதால் யார் இருப்பார்களோ, யார் இறந்துவிடுவார்களோ! என்கிற ஒரு கிலி பிடித்து விட்டது. அவர்களுக்கும் இவனுடைய வாழ்க்கையின் ஸாரமற்ற நிலைமையைக்கண்டு தாங்கவியலாத விசனமும் கவலையும் பொங்கின. இதுவரையில் எத்தனையோதரம் லீவு எடுத்துக்கொண்டு வந்து போயிருக்கிறான். ஆனால் இம்முறை எதனாலோ இருவருக்குமே பிரிய மனமின்றித் தவித்தது.

ரகு கண்ணீர் சொட்ட "மாமா! ஏதோ காரணத்தால் தாங்கள் தள்ளாத வயதில் தனித்திருக்கிறீர்கள். அந்த தந்திரத்திலும் எனக்கு ஒருவிதமான சுகமுமில்லை. இனி எது எப்படியானாலும் தள்ளாத தசையிலுள்ள உங்களை நான் பிரியவே மாட்டேன். தாங்கள், காமு சித்தி முதலியஎல்லோரும் என்னோடு ஊருக்கு வந்துவிடுங்கள். என்ன குறைந்தாலும் இன்னும் மூன்று மாதத்திற்கு சுலோசனா அங்கு வரப் போவதில்லை. அதுவரையிலாவது தாங்கள் எல்லோரும் என்கூடவிருந்தால்தான் என் மனது ஒரு துளியாவது சாந்தியடையும்... சித்தி! நீங்களும் என்னை உங்கள் சகோதரி

யின் மகனென்றே ஆதிமுதல் பாவித்து வருவதால் சுதந்திரமாய் உங்கள் மகன் வீட்டில் இருக்க வாருங்கள். கோபாலனுக்கும் எங்கா வது வேலை செய்துவைக்கிறேன். கமலாவுக்கும் நல்லவரனைப்பார்த்து விவாகத்தைச் செய்து வைக்கி றேன். நானும் கோபுவைப்போல் உங்களுக்கு ஒரு மகன்தான். ஆகை யால் எல்லோரும் நாளைக்குக் கிளம்புங்கள். நீங்கள் யாருக்குமே பயப்படவேண்டாம். நான் சம்பா திக்கும் பொருளைக்கொண்டு நாம் கஞ்சிகாய்ச்சிக் குடிக்கலாம்'' என்று கெஞ்சிக்கேட்டான்.

எல்லோருக்கும் மனது இளகி யது. "பாவம்!...ஒண்டியாய்ப் பிறந்து ஒண்டியாய் வளர்ந்து விட்டதால் மனைவியின் மூலமாவது கற்று சங் கடம் தீர்ந்து சுகம் உண்டாகும் என்று எண்ணியதும் முற்றிலும் ஏமாற்றமாகிவிட்டதால் ஏங்கி விட் டான் பாவம்!... அவன் சொல்வது போல் அந்த மகாராணி தயவு செய்து வந்தாலும் இன்னும் 3, 4 மாதமில்லாது வரமாட்டாள். ஆகை யால் ஒரு மாதமாவது அவன் ஆசை யைப் பூர்த்திசெய்து கூடவிருந்து விட்டு வரலாம். இல்லையேல் அவன் உடம்பும் ஏங்கி இளைத்துவிடும்'' என்று எல்லோரும் தீர்மானம் செய்து மறுதினம் கிளம்பினர்கள்.

ரகுவுக்கு அத்தனை வருத்தத்தி லும் இவர்கள் வந்தது பெரிய சந் தோஷமாகத் தோன்றியதால் அவன் முகத்திலும் சிறிது தெம்பும், களை யும் உண்டாயின. அவனுக்கு வரும் 75 ரூபாய் வருமானத்தில் சிக்கன மான குடித்தனம் செய்தால் ஏன் போதாமற் போகிறது? அதோடு கிழ வரும் கிழவியும் அரிசி, பருப்பு, புளி, மிளகாய் முதலிய சாமான் களைக் கொண்டுவந்திருப்பதால் சிரமமின்றி சம்பளத்தில் 15 ரூபா மிச்சமும் கண்டதைக்கண்டு வியப் படைந்தான். தான் அழைத்துக் கொண்டு வந்தவர்களை த்ருப்திசெய் வதில் கண்ணுயிருந்ததால் யார் யாரி டமோ கெஞ்சி சிபாரிசு பெற்று தன் ஆபீஸிலேயே கோபாலனுக்கு வேலையைப் பண்ணிவைத்துவிட்ட பெருமையை காமுவால் அளவிட் டுச் சொல்லமுடியாது.

தன் குடும்பத்திற்கே ரகுதான் கஞ்சி வார்ப்பதுபோன்ற நன்றி விச்வாசம் பொங்கி வழிந்தது. ரகு நாதனை இதயபூர்வமாக ஆசீர் வதித்து வாழ்த்தினள். ஒரு ஏழைக் குடும்பத்தினருக்குச் செய்த உபகா ரம் இருட்டிடத்தில் ஏற்றிய விளக் குக்கு ஈடாக ப்ரகாசிக்கின்றது. பணக்காரர்களுக்குச் செய்யும் உப காரமோ, சில இடங்களில் சூரிய னுக்கு முன் வைத்த விளக்குபோல் கூட மதிக்கப்படுவதில்லை. இது உலக விசித்திரத்தின் அபூர்வ அனுபவம்.

நாட்கள் கடந்து ஒரு மாதமா யிற்று. இது வரையில் சுலோச னவைப்பற்றிய எந்த தகவலும் இவனுக்குக் கிடைக்கவில்லை. டாக் டர் மூலம் நன்ருக குணமாகிவிட்ட தாயும் மாலை வேளையில் பீச்சுக் காற்று வாங்க காரிலேயே வந்து காரிலேயே இருப்பதாயும் ரகு அறிந் தான். அவனுடைய இதயபீடத்தில் சுலோசனவுக்கு எத்தகைய ஸ்தா னம் கொடுத்து எப்படி ப்ரேமையை செலுத்துகிருன் என்பதை அவனைப் படைத்த கடவுள்தான் அறிவார்.

தான் வந்தது தெரியாது அவள் காரில் உட்கார்ந்திருக்கையிலாவது போய் பார்த்துவிட்டு வருவதற்கு மனது துடித்தது. ஆனல் அடுத்த விநாடியே அவன் மனமே அவனைக் கட்டுசெய்து மிரட்டியது.

183103

# பாலர் மோகினி

முதல் புத்தகத்துக்கு விஷயதானம் செய்துள்ளவர்கள்:-
ஸ்ரீ காஞ்சீ. ப்ர. ப. அண்ணங்கராசார்யர் ஸ்வாமி ; கவியோகி சுத்தானந்த பாரதி; பி. ஸ்ரீ. ஆசார்யா; காப்டன் என் சேஷாத்திரிநாதன்; பி. ஆர். ராஜசூடாமணி ; வை. மு. கோ. ; படங்கள்—ராகவன்

பதிப்பாசிரியர் : வை. மு. ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்

## உங்கள் குழந்தைக்கு முதற் புத்தகம் வாங்கிக்கொடுத்தீர்களா ?

இன்னுமில்லையாயின் உடனே வரவழைத்துக்கொடுங்கள். சில பிரபலஸ்தர்களின் வரவேற்பைக் கீழே கவனித்து, உங்கள் செல்வக் குழந்தையின் மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் முன்னிட்டு உடனே 2-4-0 அனுப்பி பார்த்திப முடிவுக்குள் வெளியாகும் 6 புத்தகங்களும் கிடைக்கும் படிப் பதிவுசெய்து கொள்ளுங்கள் :

ஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதி கொண்டாடுகிறார் :

"......a lovely booklet for children. The get up is very attractive......"

ஸ்ரீமான் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி வாழ்த்துகிறார் :

"...I have much pleasure in congratulating you on securing the services and cooperation of renowned scholars to contribute to this children's series My best wishes for the success of the cause for which this laudable work has been taken up by you..."


ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன் பாராட்டுகிறார் :

"....தமிழ்க்குழந்தைகளின் தவப்பயனால் பாலர் மோகினி பிறந்திருக்கிறது போலும்......அருமைக் குழந்தைகளே! சிங்காரத்தோற்றமும், உங்கள் குட்டிக் கைகளுக்கு அடக்கமாகவும், அழகழகான படங்களும் கொண்டு அற்புதமாக விளங்குகிறாள் பாலர்மோகினி. இந்தக் குழந்தையின் தோழியைத் தவறாமல் படித்து வாருங்கள். உங்கள் அறிவு வளரும். உள்ளம் குளிரும். பொழுது பயன்படும். ஊக்கமும் உத்ஸாகமும் மூண்டு தமிழ்நாட்டுத் தவக்குழந்தைகளாக, கல்விக்களஞ்சியமாக விளங்குவீர்களாக......"

இது போன்று எழுதியுள்ள பலருக்கும் எமது வந்தனம்

All rights of reproduction and translation of the contents of JAGANMOHINI are strictly reserved. The names and characters in all stories in this magazine are entirely imaginary and have no reference whatsoever to real persons.
JAGANMOHINI is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, Vaithamanidhi Cottage, Station Road, Singaperumalkoil
JAGANMOHINI is owned and edited by Mrs. V. M. KOTHAINAYAKI AMMAL, assisted by the Editor-in-charge V. M. SRINIVASAN, M.A., B.L.

Jaganmohini (July 1945) Regd. No. M. 2210




உங்கள் பிரதிக்கு இன்றே ஆர்டர் செய்யுங்கள்